Registered as a news paper.　　பொதுசன நூலகம்　　பக்கங்கள்: பன்னிரண்டு　　விலை: ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02　திருவள்ளுவர் ஆண்டு: 2035　சித்திரை 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1427　ர.அவ்வல் 22 (13.05.2004)　வியாழக்கிழமை　இதழ்:224

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்டுகளுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038　(சி/2485)

## இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலநறுவையில் கொலை

### கருணா குழுவைச் சேர்ந்தவர்களாம்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள அரலகன்வில பகுதியில் இரண்டு தமிழ் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம்குறித்து மேலும் தெரிய வருவதாவது -

மன்னம்பிட்டியப் பகுதியிலுள்ள அரலகன்வில, சொருவில என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கே.பாக்கியராசா (வயது 27) சொருவில, கோகிலன் (வயது 23) கிரான், மட்டக்களப்பு ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பாக்கியராசாவின் வீட்டிற்கு வந்த இனந்தெரியாத நபர் ஒருவரே மிக நெருக்கமாக நின்று பிஸ்டல் மூலம் சுட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தலையிலும், மார்பிலும் சூடுபட்ட இந்த இரு இளைஞர்களும் உயிரிழந்தனர். இவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி – பிரபாகரன் சந்திப்பு இப்போதைக்கு அவசியமில்லை!

### புலிகள் அறிவிப்பு



(கிளிநொச்சி)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வெளியான செய்திகளை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளனர்.



நோர்வே தரப்பின் ஊடாக தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை லண்டனில் சந்திக்கவுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இச்செய்தி குறித்து தமது அமைப்பும் உறுப்பினர்களும் ஆச்சரியம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியுடன் கிளிநொச்சி வருகிறார் ஹெல்கிசன்!

## இன்று காலை புலிகளிடம் கையளிப்பு

(கிளிநொச்சி)

**சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், இன்று காலை கிளிநொச்சிக்கு வந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட செய்தி ஒன்றை புலிகளின் தலைமைப்பீடத்திடம் கையளிக்கவுள்ளார்.**

**இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சிக்கு ஹெலிகொப்டர் மூலம் வருகை தரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் புலிகளிடம் ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியை கையளிக்கவுள்ளனர்.**

விதார் ஹெல்கிசனுடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுமுன்தினம் விதார் ஹெல்கிசனும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனும் கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடு

இதன் போது அவர்கள் ஜனாதிபதி தெரிவித்த செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரிடம் சமர்ப்பித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாகவும், சம அந்தஸ்துடன் பேச்சுக்கு அழைப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரம் குறித்து பேச்சுவார்த்தை

## அமெரிக்க இராஜாங்க அதிகாரி இன்று கொழும்பிற்கு வருகிறார்!

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பாக - பேசசுக்கள் நடத்தவே கிறிஸ்ரினா றொக்கா இலங்கை வரவுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில், கிறிஸ்ரினா றொக்காவுடன் தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இங்கு வருகைதரவுள்ளதாகக் குறிப்பிடப்



கையளிக்கவுள்ளார்.

**இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சிக்கு ஹெலிகொப்டர் மூலம் வருகை தரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் புலிகளிடம் ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியை கையளிக்கவுள்ளனர்.**

விதார் ஹெல்கிசனுடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் விதார் ஹெல்கிசனும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனும் கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தனர்.

இதன் போது அவர்கள் ஜனாதிபதி தெரிவித்த செய்தியை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரிடம் சமர்ப்பித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாகவும், சம அந்தஸ்துடன் பேச்சுக்கு அழைப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அறிவித்த ஜனாதிபதி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பாக - பேசசுக்கள் நடத்தவே கிறிஸ்ரினா றொக்கா இலங்கை வரவுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில், கிறிஸ்ரினா றொக்காவுடன் தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இங்கு வருகைதரவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வரும் றொக்கா, பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்து இரு நாடு



களுக்கும் இடையிலான உறவுகள் குறித்து ஆராய்வார் எனத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விலைக் கட்டுப்பாட்டுமுறை நாளைமறுதினம் முதல் அமுல்

## நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி அறிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழப் பகுதியெங்கும் நாளை மறுதினம் முதல் - தமிழீழ விடுதலைப் புலிகளின் "விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவின்" செயற்பாடுகள் நடைமுறைக்கு வரவுள்ளது.

பளையிலுள்ள தமிழீழ வருவாய்த்துறை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து தமிழீழ நிதிப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி இத்தகவலை வெளியிட்டார்.

இந்த நடைமுறையின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட விலைப் பட்டியல்களின் படி விற்பனை நடவடிக்கை இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தக நிலையங்களில் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வன்னி மற்றும் யாழ். மாவட்டத்தினுள், மீன் பிடி நடவடிக்கைகளுக்கென எடுத்துவரப்படும் வெளியிணைப்பு இயந்திர உதிரிப்பாகங்களுக்கான வரித் தீர்வை முற்றாக விலக்கப்பட்டுள்ளதாகவும் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார்.

ஏற்கனவே வெளியிணைப்பு இயந்திரத்திற்கான வரித் தீர்வை முற்றாக தம்மால் விலக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், தற்போது அதற்கான உதிரிப்பாகங்களுக்கான வரித் தீர்வும், மீனவர்களின் நலன் கருதி விலக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, வன்னிப் பகுதி மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்களின் நலன்கருதி மரக்கறி வகைகளைச் சந்தைப்படுத்துவதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் தமிழீழ நிதித்துறையினரால், சிறந்ததொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்த 9 இளைஞர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்!

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துகொண்ட 9 இளைஞர்களை சுய விருப்பினடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்.

இவர்களில் இருவர் நேற்றும் நேற்று முன் தினமும் தனித்தனியே ஒப்படைக்கப்பட்டனர். நேற்று மாலை 7 பேர் ஒன்றாக பெற்றோர்களி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலம் பெயர்ந்த மக்களின் தென்னந் தோட்டங்களைப் புலிகள் மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை!

(கிளிநொச்சி)

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்த பொதுமக்களுக்குச் சொந்தமான தென்னந்தோட்டங்களை மீளக்கையளிக்கப் போவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பளை மற்றும் அதனையண்டிய பகுதிகளில் உள்ள தென்னந்தோப்புக்களே உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

(12. ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி/2489)
EXPOAIR
Your friend in the skies...

olaham Foundation.
aavanaham.org

# புனரமைப்புப் பணிகள் குறித்து ஆராய ஜப்பானிய நிபுணர்கள் யாழ். வருவர்!

## அந்த நாட்டுத்தூதுவர் அகிடோ சூடா தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காக விரைவில் ஜப்பான் நாட்டு ஆய்வுக்குழு ஒன்று யாழிற்கு விஜயம் செய்யவுள்ளது என, இலங்கைக்கான ஜப்பான் நாட்டுத் தூதுவர் அகிடோ சூடா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றைமேற்கொண்டு இங்கு வந்த அவரிடம், ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு, பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - யாழ் .மாவட்டத்தில் ஜப்பானின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவே வந்தோம். இலங்கைக்கும் - ஜப்பானுக்குமிடையே நீண்ட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு எமது நாடு, உதவிவருகிறது. இதனைச் சரியாக மேற்கொள்ள வேண்டிய கடமை அனைத்துப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கும் உரியது.

உதவிகளை யாழ். மாவட்டத்திற்கு வழங்க எமது நாடு தீர்மானிததிருக்கின்றது. அதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக சில துறைகளைத் தேர்வுசெய்வதற்கும் அது தொடர்பாக பேசுவதற்குமே நான் இங்கு வந்தேன்.

வைத்தியசாலை, பல்கலைக் கழகம், வெடிபொருள் அகற்றும் பிரிவு முதலியன தொடர்பான அபிவிருததிப் பணிகளை மேலும் விருத்தியடையச் செய்ய வேண்டியுள்ளது.

இதற்கான பணிகளை மதிப்பிடவும், யாழ் .மாவட்ட நிலைமைகள் குறித்து, ஆராயவும் விசேட குழுவொன்று, விரைவில் ஜப்பானிலிருநது இங்கு வருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)


# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எக்ஸ் - கதிர்இயந்திரம் அன்பளிப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு 5.5 மில்லியன் ரூபா பெறுமதியான எக்ஸ் - கதிர் இயந்திரம் ஜப்பான் ஜெய்கா நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் எக்ஸ் - கதிர் இயக்க இயந்திரத்தையும், அதற்கான மின்பிறப்பாக்கியையும் அன்பளிப்புச் செய்துள்ளது. தற்போது அவற்றினை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், ஒருசில தினங்களில் இக்கருவி இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் எக்ஸ் - கதிர் இயந்திரம் இல்லாததால், யாழ்ப்பாணம், வவுனியா சென்று நோயாளர்கள் எக்ஸ்ரே எடுக்கவேண்டியநிலை இருந்து வந்தது. இனிமேல் அநதக் கஷ்டம் இராது என வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.(17)




ஊடகவியலாளர்களுக்கான மனித உரிமை தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் சேனக்க திஸநாயக்கா ஊடகவியலாளர்களுக்கு கருத்து வழங்குவதையும் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களையும் படத்தில் காணலாம்.

## மாநகரசபையில்

# போதிய நிதிவசதி இல்லாமையால் அபிவிருத்திப் பணிகள் பாதிப்பு!

யாழ் .மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் புனரமைப்பு மற்றும், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு, நிதிப்பற்றாக்குறையாக இருப்பதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்களிடமிருந்து வடிகால்கள் அமைத்தல் மற்றும், புனரமைப்புத் தொடர்பான விண்ணப்பங்கள் வந்துசேருகின்றபோதும், நிதியின்மையால் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் நிதியமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், நிதிகிடைக்கும் பட்சத்தில் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனவும், அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள குறைந்தது மூன்று அல்லது நான்கு வருடங்கள் தேவைப்படும் எனவும், மாநகரசபையினரால் தெரிவிக்கப்பட்டது. (செ)

# கொக்குவில் பொது நூலகத்தில் ஆளணிப் பற்றாக்குறை!

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கிவரும் கொக்குவில் பொது நூலகத்தில் ஆளணிப்பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தமாதம் இந் நூலகத்திற்கு வந்த மாணவியொருவரின் துவிச்சக்கரவண்டி களவுபோனதை அடுத்து, பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு மாணவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக பிரதேச சபை செயலாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந் நூலகம் கிராமசபையின் கீழ் இயங்கிய வேளையில் பணியாற்றிய ஆளணியினரே தற்போதும் கடமையாற்றுவதாகவும், மேலதிக ஆளணியினரை நியமிக்குமாறு, உரிய தரப்பினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவித்தார். தற்போது இப்பிரதேச சபைக்குட்பட்ட நியமனங்களை திறைசேரியே மேற்கொண்டுவருவதால் தேவையான ஆளணியினரைப் பெறமுடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 9 ஆவது மாகாண விளையாட்டுப்போட்டி ஜூலை மூன்றில் வவுனியாவில் ஆரம்பம்!

## மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் நடத்தும் ஒன்பதாவது மாகாண பாடசாலைகள் விளையாட்டுப்போட்டிகள் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 13 ஆம் திகதி வரை இப்போட்டிகள் வவுனியாவிலும், பின்னர் 16 ஆம் தகதி தொடக்கம் திருகோணமலையிலும் நடைபெறும். இந்தப் போட்டிக்கான அட்டவணைகளை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் 23 ஆம்திகதிக்கு முன்னதாக திருகோணமலையில் உள்ள மாகாணகல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வவுனியாவில் போட்டிகளில் உடற்பயிற்சிக் கண்காட்சிப்போட்டியும், 6ஆம்7ஆம் திகதிகளில் பெண்களுக்கான கபடிப்போட்டியும், 7ஆம் 8 ஆம் திகதிகளில் பெண்களுக்கான எல்லேப் போட்டியும், 8 ஆம் 9 ஆம் திகதிகளில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியும், 9 ஆம் 10 ஆம் திகதிகளில் வலைப்பந்தாட்டப்போட்டிகளும், 12 ஆம் 13ஆம் திகதிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான சதுரங்கப்போட்டிகளும் நடைபெறும்.

16ஆம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகும் போட்டிகளில் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் ஆண்களுக்கான கபடிப்போட்டியும், 17 ஆம் 18 ஆம் திகதிகளில் உதைபந்தாட்டப்போடடியும், 18 ஆம் 19 ஆம் திகதிகளில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியும், 19 ஆம் 20 ஆம் திகதிகளில்மென்பந்து கிரிக்கெட் போட்டியும், 20 ஆம் 21 ஆம் திகதிகளில் ஆண்களுக்கான எல்லேப்போட்டியும் இடம்பெறவுள்ளது.

24 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரை கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (04)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.சி, எச்.என்.டி.எம். பாடநெறிகளை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

வேலைவாய்ப்புத் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதால், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, யாழ். மாவட்ட பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

# அரச ஊழியர்களின் இடமாற்றங்கள் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது!

தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்ட வட - கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அதிகாரசபைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான இடமாற்றங்கள் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடமாற்றங்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளுக்கு மாகாண அமைச்சினால் அனுப்பப்பட்ட போதும் இடமாற்றங்களை அமுல்படுத்துவது தற்காலிகமாக இடை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது இந் இடமாற்றங்களை உடனடியாக அமுல்படுத்துமாறு மாகாண அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இவ்வகையில் நல்லூர் பிரதேச சபையில் எழுதுநர்களாகக் கடமையாற்றிய கே.கருணாநிதி வலி வடக்குப் பிரதேச சபைக்கும் திருமதி. என். சச்சிதானந்தம் பிராந்திய மாநகர சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கும் எஸ்.தயாபரன் ரி.சிறிதரன் ஆகியோர் வேலணை வலயக் கல்வி அலுவலகத்திற்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய ரீ.பிரதாபன் யாழ்.மாநகர சபைக்கும் ரீ.சிவலிங்கம் சாவகச்சேரி நகரசபைக்கும் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

## மாநகர சபை - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

மாநகரசபையால் நீர்வழங்கல் செய்வதற்கான கீழ்காணும் புதிய நீர் உநதி இயநதிரம் ஒன்று, அதன் இணைப்பொருட்களுடன் தேவை. இதனை விநியோகம் செய்யும் தாபனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது. இக்கேள்விகள் யாவும் 26.05.2004 ஆம் திகதிக்குள் கீழ்க்காணும் விபரங்கள் அடங்கியதாக படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடதுபக்கம் "பிஓ/01/2004 நீர் உந்தி" என எழுதப்பட்டு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (வழங்கல் அங்கீகாரம் கிடைத்து 10 நாட்களில் மாநகரசபைக் களஞ்சியத்தில் பரிசீலிக்கப்பட்டு கையளித்தல் வேண்டும்.)

**Submersible Pump supply for Jaffna Municipal Council Pump Station**

Submersible water pump with Motor with submersible cable with kit and necessary all fittings.

| | | |
|---|---|---|
| Make | - | Specify Make |
| Brand | - | Specify |
| Capacity | - | 80 $M^3$ / hr |
| Head | - | 65M |
| Motor rating | - | 22KW |
| No.of Stages | - | 04 |
| Outlet | - | 04 Inches |
| Maximum dia | - | 183 MM |
| Voltage | - | 400V, 3Ph, 50 Hz |
| Efficiency | - | 77 % |

Rate include installation and commissioning state clearly guarantee period and spares needed for 2 years operation.

**Municipal Council, Jaffna.**
**12.05.2004.** (சி-2522)

**E.RAMALINGAM**
Municipal Commissioner,
Municipal Council, Jaffna.

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிநேகா, நாசர் நடித்த
வசீகரா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பி.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பி.நே.)
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
The World is not enough
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடிக்க
கில்லி



காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பி.நே)
21 ஆம் திகதி முதல்
ஆய்தஎழுத்து!
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
2 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு
நடித்த



அருள்
(நீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே)
மே 7 முதல்,அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவின் நேரடித் தலையீடிருக்காது

## ஹிந்துஸ்தான் டைம்ஸ் கூறுகிறது

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து மீண்டும் இலங்கை மக்கள் மத்தியில் பரவலான கருத்துக்கள் எழுந்துள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

**இலங்யைின் பிரதமர், வெளிநாட்டமைச்சர் மற்றும் அரசியல்கட்சிகளின் உறுப்பினர்கள் போன்றோரும் இலங்கை விடயத்தில் இந்தியா தலையிடவேணடும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர். எனினும் தற்போதைய நிலையில் இந்தியா இந்த விடயத்தில் மறைமுக தலையிட்டையே கொண்டிருக்கும் என அந்தப பத்திரிகை கூறியுள்ளது.**

இந்தியா எப்போதும் இலங்கையின் இனப்பிரச்சினையினை உள்நாட்டிலேயே தீர்க்கப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளது. எனவே இங்கு வெளிநாடு ஒன்றின் தலையீடு குறைந்த அளவிலேயே அமையவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

இலங்கையில் வாழும் பெரும்பாலானவை சிங்களவர்களும் தமிழர்களும். பாரிய அளவிலான அதிகாரப் பரவலாக்கல்களை மேற்கொள்ள இந்தியா விருப்பம் கொள்ளவில்லை என்ற கருத்தையே கொண்டுள்ளனர் என்பதை சுட்டிக் காட்டியுள்ள ஹிந்துஸ்தான் ரைம்ஸ், இந்தியா ஒருபோதும் இலங்கைத் தமிழர்கள் பாரிய பேரம்பேசலுடன் அதிகாரப் பரவலாககலை பெற்றுக் கொள்வதற்கு எதிர்ப்புக் காட்டியதில்லை எனத் தெரிவித்துள்ளது. அதேநேரம் இலங்கையின் தமிழர்களுக்கு அதிக அதிகாரம் பகிரப் படுவதன் காரணமாக - தமிழ்நாடு தொடர்பாக இந்தியா பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என இலங்கையிலுள்ள தமிழர்களும் சிங்களவர்களும் எண்ணுவதில் எந்தவித யதார்த்தங்களும் இல்லை என்பதே இந்தியாவின் கருத்தாகும். ஏனெனில் இந்தியா பிராந்தியமான தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும், இலங்கையில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுவதே இதற்கான காரணம் ஆகும் என ஹிந்துஸ்தான் டைம்ஸ் கூறியுள்ளது.

எனவே, இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவிதமான அதிகாரப் பரவலாக்கலை வழங்கவேண்டும் என்பதை இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளுமே தீர்மானிக்க வேண்டும் என்பதே ஹிந்துஸ்தான் டைம்ஸின் ஆலோசனையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் பிரிவினைவாத கொள்கைகள் இருந்தன. எனினும் இந்தியாவின் அரசியல் அமைப்பில் காணப்படும் சிறந்த அம்சங்களால் அந்தக் கொள்கைகள் இயற்கையாகவே மரணித்துவிட்டன. எனவே இந்தியாவின் பல்வேறு இனங்கள் மற்றும் மக்கள் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தவில்லை என ஹிந்துஸ்தான் டைம்ஸின் கொழும்பு செய்தியாளர் பி.கெ.பாலச்சந்திரன் தெரிவித்தார். இந்த நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா நேரடித் தலையீடு கொள்ளாமைக்குக் காரணங்களாக, இலங்கையின் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களைக் ஹிந்துஸ் தான் டைம்ஸின் கொழும்பு செய்தியாளர் தமது செய்தித் தொகுப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் குற்றம் சுமத்தப்பட்டிருப்பது, இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் கடந்தகால அனுபவங்கள் போன்றவையே இந்தியாவின் நேரடித் தலையீடின்மைக்குக் காரணமென உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்தநிலையில் இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்த அடிப்படையில் இந்தியாவின் நேரடித் தலையீடு இலங்கையின் இனப்பிரச்சினையில் இருக்காது என ஹிந்துஸ்தான் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

### ஹெல உறுமய 2 குழுக்களாகப் பிளவு

மாகாணசபை தேர்தல் தொடர்பான இழுபறி நிலையினால் ஜாதிக ஹெல உறுமய இரு குழுக்களாகப் பிளவுபட்டு நிற்பதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய போட்டியிடக்கூடாதென ஒரு குழுவினரும், போட்டியிட வேண்டுமென இன்னுமொரு குழுவினரும் தொடர்ந்தும் முரண்பட்டு வருகின்றமையே இதற்கான காரணமாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பிட்டளவு ஆசனங்களை ஜாதிக ஹெல உறுமய பெற்றிருந்தாலும், அக்கட்சி மக்கள் ஆதரவை தற்போது இழந்து வருவதால் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது பொருத்தமற்றது என அக்கட்சியின் முன்வரிசை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை விடுத்து, அதன் மூலக் கட்சியான சிஹல உறுமயவின் கருத்துக்களுக்குச் செவிமடுபதாக ஜாதிக ஹெல உறுமயவிற்கு நிதியுதவி செய்துவந்த சில வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் இவர்கள் கட்சிக்கு வழங்கி வந்த ஆதரவையும் விலக்கிக் கொண்டுள்ளதாகவும் தெரிவிககப்படுகிறது.

# வெசாக் பொதுமன்னிப்பு; கைதிகள் விடுவிப்பில் முறைகேடு!

(கொழும்பு)

இந்தவருட வெசாக் தினத்தன்று, ஜனாதிபதி சந்திரிகா, சுமார் ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார்.

இது விடயத்தில், கடும் பாரபட்சம் காட்டப்பட்டதாகவும், உண்மையில் மன்னிப்பைப் பெறத் தகுதியானவர்கள் பலரும் சிறையிலிருக்க, மேலிடத்து ஊடுருவல் உள்ள பல கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையின் கூரைமீது ஏறி உண்ணாவிரதமிருந்து தங்கள் எதிர்ப்பைக் காட்டிய பல கைதிகள், நீதியமைச்சர் செனவிரத்னவின் நேரடிச் சந்திப்பின் பின்னர் தங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

நீதியமைச்சர் இக்கைதிகளைச் சந்தித்தபோதே, இத்தகைய ஊழல்கள் வெளிவந்த கைதிகளிடம், இந்த ஊழல் குறித்து விரிவாக ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த அமைச்சர், இந்த விடயங்களை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இதையடுத்து, பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் பட்டியலை மீண்டும் ஆராய்ந்து, விரிவான அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதியமைச்சிடம், ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

### ஊடகவியலாளருக்கு கொலை பயமுறுத்தல்

(கொழும்பு)

குருநாகல் பிரதேச தமிழ் ஊடகவியலாளா எஸ். ரமேஸுக்கு மீண்டும் கொலை அச்சுறுத்தல் விடுக கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

தமக்கு நேற்று முன்தினம் காலை வந்த தொலைபேசி அழைப்பிலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் வடமேல்மாகாண பொலிஸ் அதிபர் ரட்ணவீரவுக்கு முறையிட்டள்ளார். இதனையடுத்து அவர் விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே தனக்கு அச்சுறுத்தல் விடுத்தது தொடர்பாக பொலிஸாருக்கு முறையிட்டமை தொடர்பிலேயே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(01)



இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவரும் செயலாளரும் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தவேளை எடுக்கப்பட்ட படம்.

# அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியே சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும்

## லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சி.என்.என். தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்வதாகவும், அவர்களுடன் மட்டுமே பேச்சுக்கள் தொடரும் என்றும் இரு நாட்களுக்கு முன்னர் நோர்வே பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ள நிலையில், அதற்கு முற்றிலும் முரணபட்ட ஒரு கருத்தை, சந்திரிகாவின் அமைச்சரவையிலுள்ள வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு, தனியாக விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடாத்தியதை மக்கள் வெறுத்ததனாலேயே, தேர்தலில் அக்கட்சி படுதோல்வி கண்டதாகக் குறிப்பிட்ட கதிர்காமர், வெற்றிபெற்ற தமது கட்சி, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஓர் விரிவுபட்ட பேச்சுவார்த்தையை மட்டுமே மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

நோர்வே தரப்பினரின் பணி குறித்துக் கேட்கப்பட்ட இன்னுமொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், நோர்வே பிரதிநிதிகள் வெறும் இடைத்தரகர்களாக மட்டுமே பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்றும், முன்புபோல் பேச்சுவார்த்தையின் அனுசரணையாளர்களாக அவர்கள் பணியாற்ற ஒருபோதும் தனது அரசு அனுமதிக்காது என்றும் கூறியுள்ளார்.

அடுத்தகட்டப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்களாவது எடுக்கும் என்றும் அவர் பதிலளித்துள்ளார்.

இன்று மாலை, ஜனாதிபதி புஷ்ஷின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான கொன்டலீசா ரைசைச் சந்திக்கும் கதிர்காமர், அதைத் தொடர்ந்து அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவலையும் சந்திக்கவுள்ளார்.

# யாழ்.மாவட்ட தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு ஆனந்தசங்கரி மனு!

## உயர்நீதிமன்றில் தாக்கல்

யாழ்.மாவட்டத்தின் பொதுத் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு கோரும் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்ட வீ.ஆனந்தசங்கரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக - யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி, தேர்தல் ஆணையாளர், இராணுவத் தளபதி, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பலர் குறிப்பிடப் பிட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பொதுத் தேர்தல் நீதியானதாகவும், சுதந்திரமான முறையிலும், இடம்பெறவில்லை என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

முகமாலை தேர்தல் வாக்களிப்பு நிலையம் உட்பட மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் முறைகேடுகள் காரணமாக தமது அடிப் படை உரிமை மீறப்பட்டதாக மனுதாரரான ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறும் அத்துடன், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதன் காரணமாக ஒரு மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறும் அவர் தனது மனுவில் கோரியுள்ளார்.

(01)

# பிரதி பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும், பௌத்த சாசன அமைச்சராகவும் இரட்னசிறி விக்கிரமநாயக்க விரைவில் பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதியின் முன்னிலையில் இவ்வமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதற்கான சத்தியப் பிரமாணத்தை அவர் விரைவில் மேற்கொள்ளவுள்ளார். இவர் ஜனாதிபதியின் நெருங்கிய அரசியல் சகாவாக விளங்குவதோடு, பிரதமராகவும் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சுக்கான பிரதியமைச்சராக மேர்வின் சில்வாவும் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்கவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள இவ்விருவரது பெயர்களும் தேர்தலுக்கு முன்பாக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பெயர்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

தேர்தல் முடிவடைந்த பின்பே இவர்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வே கிரிக்கெட் அணியிலிருந்து ஹீத் ஸ்ரீக் உட்பட 15 வீரர்கள் நீக்கம்!



(ஹராரே)

சிம்பாப்வே அணியிலிருந்து முன்னாள் கப்டன் ஹீத் ஸ்ரீக் உட்பட 15 வீரர்களை அந்நாட்டு கிரிக்கெட் சபை நீக்கியுள்ளது.

இனப்பிரச்சினை காரணமாக தேர்வாளர்களுடன் ஏற்பட்ட மோதலினால், சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் கப்டன் பதவியை ஹீத் ஸ்ரீக் கடந்த சில வாரங்களுக்கு முன்பு ராஜினாமா செய்தார்.

ராஜினாமா செய்தது மட்டுமல்லாமல், ஸ்ரீக் அணியிலிருந்தே வெளியேறினார். அவருக்கு ஆதரவாக மேலும் 14 வெள்ளை இன வீரர்களும் அணியிலிருந்து வெளியேறினர்.

ஸ்ரீக்கின் ராஜினாமாவைத் தொடர்ந்து புதிய கப்டனாக கறுப்பர் இனத்தைச் சேர்ந்த தைபு நியமிக்கப்பட்டார். தைபு தலைமையிலான சிம்பாப்வே அணி இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, சிம்பாப்வே கிரிக்கெட் சபை அணியிலிருந்து வெளியேறிய 15 வீரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியது.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவே மீண்டும் 15 வீரர்களும் அணிக்குத் திரும்பினர். பின்னர் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கு 15 வீரர்களின் ஸ்ரீக் உட்பட 4 வீரர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும் தைபுவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, ஸ்ரீக்கை மீண்டும் கப்டனாக்க வேண்டும் என்று வெள்ளை இன வீரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதை சிம்பாப்வே கிரிக்கெட் சபை ஏற்காததைத் தொடர்ந்து 4 வீரர்களும் அணியிலிருந்து விலகினர்.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் சிம்பாப்வே அணி தோற்றதைத் தொடர்ந்து அந்நாட்டு கிரிக்கெட் சபை 15 வீரர்களிடமும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியது.

பேச்சுவார்த்தையின் போது வீரர்களுக்கு வழங்கப்படவேண்டிய பணம் உட்பட பல்வேறு பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. ஆனால், இதில் உடன்பாடு ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து அணியிலிருந்து விலகியிருந்த ஸ்ரீக் உட்பட 15 வெள்ளை இன வீரர்களையும் சிம்பாப்வே கிரிக்கெட் சபை அதிரடியாக நீக்கியது.

# அத்தப்பத்து மீதான விசாரணை வாபஸ்!



இலங்கை கிரிக்கெட் அணியின் கப்டன் அத்தப்பத்து கடந்த டிசம்பர் மாதம் இங்கிலாந்து அணி இலங்கையில் விளையாடியபோது இவர் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் ஒரு லட்சம் ரூபா கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பணத்துக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று அத்தப்பத்து தெரிவித்திருந்தார். சூதாட்டக்காரர் ஆட்டத்தை முன்கூட்டியே நிர்ணயம் செய்வதற்காக அணுகினாரா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அவர் மீது சூதாட்டப் புகார் கூறப்பட்டது.


அத்தப்பத்து தங்கியிருந்த அறையில் பணம் கிடந்ததாக ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புக் குழு அத்தப்பத்து மீது விசாரணை நடத்தியது.

இந்த நிலையில், விசாரணையை வாபஸ் பெறுவதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது. அத்தப்பத்து மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் விசாரணை வாபஸ் பெறப்பட்டுள்ளது.

33 வயதான அத்தப்பத்து 1990-91 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரில் அறிமுகம் ஆனார். இது வரை எந்த ஒரு இலங்கை வீரரும் சூதாட்டத்தில் சிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# போதை பாவனையிலிருந்து விடுபட மரடோனாவுக்குக் கடைசி வாய்ப்பு!



போதைப்பொருள் பாவனையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த பிரபல முன்னாள் உதைபந்தாட்ட வீரரான மரடோனா இறுதிக்கட்ட போராட்டம் நடத்தி வருவதாக அவரது தனிப்பட்ட மருத்துவர் அல்பிரடோ காஹே தெரிவித்தார்.

இருதய வலியின் காரணமாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த 43 வயதான மரடோனா ஆர்ஜென்ரீனா தலைநகர் புவனஸ் அயர்சில் உள்ள தனியார் போதை மருந்து மறுவாழ்வு நிலையத்தில் சேர்க்கப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

போதை மருந்துக்கு எதிரான மரடோனாவின் இறுதிக்கட்ட போராட்டம் இது என்று போதை மருந்தில் இருந்து மீள மரடோனாவுக்கு இதுவே கடைசி வாய்ப்பு என்றும் காஹே தெரிவித்தார்.

மரடோனாவின் விருப்பத்துக்கு மாறாக தற்போது அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் காஹே தெரிவித்தார். கியூபா அல்லது புவனஸ் அயர்சில் உள்ள வீடடிற்கு திரும்ப மரடோனா விருப்பம் தெரிவித்திருந்தாலும், அவரது விருப்பத்திற்கு மாறாக தற்போது சிகிச்சையளிக்கப்பட்டு இருப்பதாக காஹே தெரிவித்தார்.

கடந்த 4 வருடங்களாக மரடோனா வாழ்ந்து வரும் கியூபாவிற்கு வர அவர் விரும்பினால் அதற்காக விமானம் ஒன்றை அனுப்பி வைப்போம் என கியூபா தலைவர் பிடல் காஸ்ட்ரோ அறிவித்துள்ளார்.

மரடோனாவிற்கு சிகிச்சையளிக்க தயாராக இருக்கும் மருத்துவமனையை கடந்த சனிக்கிழமை முதல் மரடோனாவின் குடும்பத்தினர் தேடி வருகின்றனர். மருத்துவ சிகிச்சைக்கு மரடோனாவிடம் இருந்து போதிய ஒத்துழைப்பு இருக்காது என்பதால் பல மருத்துவமனைகள் அவருக்கு சிகிச்சையளிக்க மறுத்துவிட்டன.

106 கிலோ எடை கொண்ட மரடோனா போதை மருந்தின் பிடியில் சிக்கி பல வருடங்களாக அவதிப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகவே கடந்த மாதம் அவரது உடல்நிலை மிக மோசமான நிலையை அடைந்ததாக மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மரடோனாவுக்கு தற்போது உணவுக்கட்டுப்பாடு, முழு ஓய்வு அளிக்கப்பட்டு வருகின்றது.

1986 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி மரடோனா தலைமையில் சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை - பாகிஸ்தான் இடையே

# மலேசியாவில் நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி ஒத்திவைப்பு!

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையே மலேசியாவில் நடைபெறவிருந்த ஒருநாள் போட்டித் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மலேசியாவில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் இந்தப் போட்டி வரும் நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மலேசிய கிரிக்கெட் சங்கத் தலைவர் டுங்கு இம்ரான் கூறுகையில் இலங்கை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் மலேசியாவில் நடைபெறவிருந்த சலஞ்ச் கோப்பை போட்டி - வரும் நவம்பர் மாதத் தொடக்கத்தில் நடைபெறுவதாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

ஆசிய கிரிக்கெட் சபையின் கருத்தரங்கு லாகூரில் சமீபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் போது இம்ரான் - இலங்கை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

முன்னதாக இந்தப் போட்டியானது வரும் 25,27,29 ஆகிய திகதிகளில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்தப் போட்டிக்கான பிரதான அனுசரணையை பெற மலேசிய கிரிக்கெட் சங்கம் தவறியதால் இந்தப் போட்டி தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# சிம்பாப்வே தொடரில் மக்ராவும்

(மெல்பேர்ண்)



அவுஸ்ரேலிய அணியின் மெக்ரா, காயம் காரணமாகக் கடந்த சில மாதங்களாக எந்தப் போட்டியிலும் விளையாடவில்லை. இந்தியா, இலங்கை தொடர் மற்றும் இரண்டு 3 நாடுகள் போட்டி ஆகியவற்றில் அவர் ஆடவில்லை.

இந்தியாவில் சிம்பாப்வே தொடரில் மெக்ரா விளையாட அதிக வாய்ப்பு உள்ளது. முழு உடல் தகுதியுடன் அவர் இருப்பதால் அணியில் இடம்பெறுகிறார். அவுஸ்ரேலிய அணி சிம்பாப்வேயில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது.

முதல் டெஸ்ட் வருகிற 22 - 26 ஆம் திகதிவரை ஹராரேயிலும் 2 ஆவது டெஸ்ட் மே 29 ஜூன் 2 ஆம் திகதிவரை புலவாயோவிலும் நடைபெறும்.

ஒருநாள் போட்டிகள் ஜூன் 6, 9 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

# இங்கிலாந்து அணியை விட்டு ஹூசைனை நீக்கவேண்டும்!

## முன்னாள் வீரர் இயன் பொத்தம் கூறுகிறார்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான நசார் ஹூசைலை அணியிலிருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக புதிய நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரரை அணியில் இடம்பெறச் செய்யவேண்டும் என்று, இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரரான இயன் பொத்தம் தேர்வுக் குழுவினரை கேட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியின் நடுத்தர வரிசையில் இப்போதே இளம் வீரர்களைச் சேர்க்கும் முயற்சி எடுக்கப்படவேண்டும். இல்லையென்றால் மிகப்பெரிய பிரச்சினையை சந்திக்க நேரிடும் என்றும் பொத்தம் எச்சரித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் தற்போது இடம்பெற்றிருக்கும் நசார் ஹூசைன், கிரஹாம் தோர்ப் இருவருக்கும் முறையே வரும் ஓகஸ்ட் மாதம் 36, 35 வயதாகிறது. மற்றொரு முன்னணி வீரரான மார்க் புட்சரும் வரும் ஓகஸ்ட் மாதம் 32 வயதை எட்டுகிறார்.

இதனால், இங்கிலாந்து அணியின் நடுத்தர வரிசையில் அடுத்தடுத்து வீரர்கள் ஓய்வுபெறும் நிலையில் உள்ளனர். எனவே இப்போதே நடுத்தர வரிசையில் இளம் வீரர்களை சேர்க்க இங்கிலாந்து முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று பொத்தம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு முன்மாதிரியாக முன்னாள் கப்டனான ஹூசைன் அணியிலிருந்து வெளியேறி இளம் வீரர்களான அன்ட்ரூ ஸ்ட்ராஸ், போல் கொலிங்வூட் ஆகியோருக்கு வழிவிட வேண்டும் என்றும் இயன் பொத்தம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக தனது உழைப்பை எல்லா விதத்திலும் ஹூசைன் கொடுத்திருந்தாலும் நடுத்தர வரிசையில் யார் சிறப்பாக விளையாடுகிறார்களோ அவர்களுக்கு வழிவிடவேண்டும். ஏனெனில, ஹூசைன், புட்சர் போன்றவர்கள் ஓய்வு பெறுவதற்குள் நடுத்தர வரிசையில் இளம் வீரர்கள் செட் ஆக வேண்டியது மிகவும் அவசியம்.

ஆனால், இப்படி இல்லாமல் 3 சிரேஷ்ட வீரர்கள் திடீரென ஓய்வு பெற்றால் இவர்களுக்குப் பதிலாக அணிக்குள் வரும் இளம் வீரர்கள் அணிக்குள் நிலையான இடத்தைப் பிடிப்பது என்பது சிரமமான விடயமாகும் என்று பொத்தம் தெரிவித்துள்ளார்.

### கென்ய வீரர் ஒடும்பே மீது விசாரணை

கென்ய அணியின் நம்பிக்கை நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மொறிஸ் ஒடும்பே, 2002 ஆம் ஆண்டு இந்திய சூதாட்டக்காரரிடம் இருந்து லஞ்சம் பெற்றதாக புகார் கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து அவர் மீது விசாரணை நடத்தப்படும் என்று கென்ய கிரிக்கெட் சபை அறிவித்தது. எதிர்வரும் 19 ஆம் திகதி நைரோபியில் இந்த விசாரணை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ஒடும்பே மீது சூதாட்ட புகார் கூறப்பட்டுள்ளதால், கென்ய அணியின் முன்னாள் பயிற்சியாளரும், முன்னாள் இந்திய அதிரடி துடுப்பாட்ட வீரருமான சந்தீப் பட்டீல் அதிர்ச்சியடைந்துள்ளார்.

# முன்னாள் மேற்கிந்திய வீரர் வலென்ரைன் காலமானார்!



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான வலென்ரைன் தனது 74 ஆவது வயதில் புளோரிடாவில் காலமானார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் இடதுகை சுழற்பந்து வீச்சாளரான இவர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமானார்.

ஜமேக்காவைச் சேர்ந்த இவர் 36 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 139 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

1950 இல் இவர் லண்டனுக்கு சுற்றுப் பயணம் செய்த மேற்கிந்தியத் தீவுகள் அணியில் முதலாவதாக களமிறங்கிய இவர் - பிரபலமாக ஓட்டமற்ற ஓவர்கள் சாதனையை நிகழ்த்தினார்.

தொடக்கப் போட்டியிலேயே 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு வித்திட்டிருந்தார். இவர் 116 ஓவர்கள் பந்துவீசி 127 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

இதில் 75 ஓவர்களில் ஓட்டமெதுவும் கொடுக்கவில்லை. இந்த டெஸ்ட் சாதனையை வேறு வீரர்கள் எவரும் முறியடிக்கவில்லை.

வலென்ரைன் 1963 இல் கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன விடுதலையோடு சமூக விடுதலைக்காகவும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவிப்பு



எமது இனத்தின் விடுதலைப் போராட்டக் காலத்தில் வளர்ந்த நாங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எம்மாலான பங்களிப்பை வழங்கவேண்டும். ஆயுத ரீதியிலும் அரசியல் ரீதியாகவும் வலுப்பெற்றுள்ள எமது போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் பெரும் தாக்குதல்களினால் பெருமளவில் பாதிப்படைந்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்துள்ளார்கள். இதனால்தான் நாம் சுதந்திரத்துடன் இருக்கிறோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனுக்கான பாராட்டுவிழா நேற்றுமுன்தினம் மானிப்பாய் பிரதேசசபை ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் -

காலத்தின் தேவை உணர்ந்து நாங்கள் அரசியலில் பிரவேசித்தமை தவிர்க்கமுடியாத ஒன்று. நீண்டகாலமாக பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவந்த மக்களுக்கு எதிர்மாறான கருத்துக்களை பேரினவாதிகளும், பேரினவாத அடிவருடிகளும் சர்வதேச ரீதியில் தெரியப்படுத்திவந்தனர். இதனைப் பொய்யாக்கி எமது போராட்டம் நியாயமான போராட்டம், எமது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல எனச் சர்வதேச அரசுகளுக்கு உணர்த்தவே நாங்கள் இன்று தேர்தலில் நின்று, மக்களின் ஒட்டுமொத்த ஆணையைப் பெற்று, எமது மக்களின் சுயமான வாழ்வுக்கு அவர்களே தமது தெரிவுகளை மேற்கொண்டனர்.

எமது விடுதலைப் போராட்டம் சார்பான விடுதலை இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் வலுவான தலைமையின் ஏற்பாட்டில் நாங்கள் தேர்தலில் நிற்கவேண்டிய தேவ ஏற்பட்டது. நாம் எமது உரிமைகளை எந்த வழியிலும் வென்றெடுக்கவேண்டும். தேர்தலில் நீங்கள் வாக்களித்ததுடன் உங்கள் கடமை முடிந்துவிடவில்லை. விடுதலைப் போராட்ட காலத்தில் எல்லைப் படையாக, கிராமியப் படையாக பெரும்பங்காற்றிய மக்கள் ஒருபுறமும், மறுபுறம் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள மக்கள் பொங்குதமிழ் மூலமாக தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். இவ்வாறு தொடர்ந்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு பெரும் அழுத்தங்களைக் கொடுத்தனர்.

இதனை உணர்ந்த சர்வதேசம் யுத்தத்துக்கான உதவிகளை நிறுத்தியது. இதனால், சிங்களப் பேரினவாதத்திற்கு எங்களுடன் சமரசம் செய்ய வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது.

மக்கள் எல்லோரும் விழிப்படைந்து, ஒன்றாக இலட்சியம் ஒன்றே என நின்றவேளையில் - விடுதலைப் போராட்டத்தை வெல்ல முடியாது என்று சிங்களப் பேரினவாதம் நன்றாக உணர்ந்துகொண்டது. யாருக்கும் விலைபோகாத் தலைவன் ஒருவர் எமக்குக் கிடைத்துள்ளார். எமது தலைவனின் காலத்திலேயே எமக்குத் தனி நாடு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது எனத் தெரிவித்தார். (91,13,44)

# பிரான்பற்று வைரவர் வேள்வியில் 250 கடாக்கள் பலியிடப்பட்டன!

ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகம் பெறுமதியான கடா ஒன்று வேள்வியொன்றில் பலியிடப்பட்டது. அண்மையில், நடைபெற்ற பிரான்பற்று வைரவர் ஆலய வேள்வியின்போதே இந்தக் கடா பலியிடப்பட்டது.

இந்த ஆட்டுக் கடாவின் பெறுமதி ஒரு லட்சத்து பதினையாயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆலய வேள்வியில் பலியிடுவதற்கென இந்தக் கடா பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த ஒருவரால் வேள்விக்கு இரு வாரங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

வேள்வியில் பலியிடப்பட்ட பின்னர் இந்தக் கடா அதன் கொள் விலையின் பாதிப் பங்கிலும் மிகக் குறைவான விலைக்கே விற்பனை செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த ஆலய வேள்வியில 250 இற்கும் மேற்பட்ட கடாக்களும், பல சேவல்களும் பலியிடப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பிரதேசத்தின் முக்கிய வேள்வியான கவுணாவத்தை வேள்வி அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (94)

## நாவாந்துறை காவலரண் படையினரால் அகற்றப்பட்டது

1995 ஆம் ஆண்டு படையினர் யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாடுக்குள் கொண்டுவந்ததையடுத்து படையினர் அமைத்துக்கொண்ட காப்பரண்களில் ஒன்று நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டது.

நாவாந்துறை, முஸ்லிம் கல்லூரி வீதிச் சந்தியில் இருந்த பழைய காப்பரண்களில் ஒன்றே இவ்விதம் நீக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்கள், மக்களுக்கு இதனால் ஏற்பட்ட அசௌகரியங்கள் நீங்கியுள்ளன.

# கழிவுகள் நிறைந்து கிடக்கும் அரசடி வீதி ரயில்வேப் பாதை

யாழ். அரசடி வீதிக்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரி வீதிக்கும் இடைப்பட்ட ரயில்வேப் பாதையானது கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாறிவருகின்றது. இதனால், அந்தப் பகுதியில துர்நாற்றம் வீசுவதுடன் ரயில்வேப் பாதைக்கு அருகான பாதையாலும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் ரயில்வே வீதிப் பகுதியில் வீட்டுக் கழிவுப் பொருட்கள், கடைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள், பொலித்தீன் பைகள் என்பனவே அதிகமாகக் கொட்டப்பட்டு வருகின்றன.

பொலித்தீன் பாவனையைத் தடைசெய்யுமாறு கோரிக்கை விடப்படும் வேளையில், இந்த வீதிப் பகுதி பொலித்தீன் கழிவுகளால் நிரம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதியில் கொட்டப்படும் கழிவுகளை அகற்றுவதிலே யாழ். மாநகரசபையும் அதிக கவனம் செலுத்துவதில்லையென பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதிக்கு அருகிலேயே யாழ். இந்து மகளிர் அரம்ப பாடசாலை இயங்கி வருவதுடன் இந்த வீதியைப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்படப் பலரும் பாவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (94)

# மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வு செயற்திட்டம்

யுனிசெவ் நிறுவன ஆதரவுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யாழ். மாவட்டத்தில் மிதிவெடி இடர் அபாயக் கல்வி விழிப்புணர்வு செயற்திட்டத்தை இந்த மாதம் முதல் ஆரம்பித்துள்ளது.

இந்தச் செயற்பாடானது தற்பொழுது உடுவில், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெறுகிறது. அத்துடன் இந்தத் திட்டம் சிறப்பாக மேற்கொள்ளப் பணியாளர்களுக்கான பயிற்சிகள் இன்று முதல் தொடர்ந்து 7 நாட்கள்வரை வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இந்த் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வசதியாக சாவகச்சேரி, உடுவில் ஆகிய இடங்களில் கண்ணிவெடி விழிப்புணர்வுக் கிளைச் செயலகங்கள் மூலம் செயற்திட்டங்கள் முன்னெடுத்துச் செயற்படவுள்ளது.



பொன்னாலை கிராம அலுவலர் இடமாற்றத்தை எதிர்த்து, சங்கானை பிரதேச செயலகத்திற்கு முன் - நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.



யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும், பயனாளிகளும் நடத்திய பயிற்சிப் பட்டறையை யு.என்.எச்.சி.ஆர் யாழ் வதிவிடப் பிரதிநிதி, [illegible] விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (111)

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆசிரியர் மத்திய நிலையங்கள் புனரமைக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 15 கல்வி வலயங்களிலுள்ள ஆசிரியர் மத்திய நிலையங்கள் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

வடக்கில் 9 நிலையங்களும், கிழக்கில் 6 நிலையங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன என மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (17)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - ஆறுகால்மடம் அறிவொளி விளையாட்டுக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டமும் புதிய நிர்வகத் தெரிவும் அறிவொளி சனசமூக நிலையத்தில் வியாழக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. (91)

## சனசமூக நிலைய திறப்புவிழா

(மட்டுவில்)

மிருசுவில் படித்த மகளிர் திட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினாலும், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தாலும் புனரமைப்புச் செய்யப்பட்ட பாலர் பகல் பராமரிப்பு நிலையக் கட்டடமும், விநாயகர் சனசமூக நிலையக் கட்டடமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ந.ரவிராஜ், செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோருடன யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அலுவலர் பி.பாலகிருஷ்ணன், அதேநிறுவன தலைமை வெளிக்கள உதவியாளர் ஹைரசு கோமுறாக் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாற்றலாகிச் சென்ற கிராம அலுவலர் வே.வேல் [illegible] இணைத்து நடத்தப்படவுள்ளது (24)

## கடற்றொழிலாளருக்கு வீடமைக்க நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

முல்லை மாவட்டத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு கடற்றொழில் திணைக்களத்தினால் ஏழு இலட்சம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிதியைக்கொண்டு கடுமையாகப் பாதிப்புற்ற கடற்றொழிலாளர்களுக்கே வீடுகளை அமைக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (17)

## தகரக் கொட்டகையில் எரிபொருள் நிரப்பு நிலையம்

முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் அடிப்படை வசதிகள் அற்ற தகரக் கொட்டகையின் கீழ் இயங்கிவருகின்றது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளை அடுத்து இந்த நிலையம் சேதமடைந்தது. சங்க நிர்வாகம் இதனைத் திருத்தி அமைக்கத் தயாராகவுள்ளபோதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதற்கு அனுமதி மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (111)

## ஒஸ்மானியாக் கல்லூரியில் சத்துணவுத் திட்டம்

(வண்ணை)

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுக்கு காலையில் சத்துணவுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக, சாயி நிறுவன சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்தச் சத்துணவுத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் சாயி நிறுவனத்தினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (111)

## தமிழ் இணைய கணினிக் கருத்தரங்கு

இலங்கையில் தமிழ்மொழி ஊடான இணைய மற்றும் கணினி அறிவை விருத்தி செய்யும் முகமாக 'உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் இலங்கைக் கிளை' மேற்படி முழுநாள் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது. இந்தக் கருத்தரங்கிலே இலங்கை வல்லுனர்களுடன் தமிழ் இணையத்தில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையுடைய மலேசியாவைச் சேர்ந்த முத்துநெடுமாறன் கலந்துகொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு சுயமுயற்சித் திட்டங்கள்

கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை புனர்வாழ்வுக்கழக நடைமுறைப்படுத்தவுள்ளது.

இவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தக்கூடிய விதத்தில் தொழிற்பயிற்சிகள், சுய தொழில் முயற்சிக்கான வசதிகள் என்பன ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற புனர்வாழ்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தவுள்ளன.

இந்தப் புனர்வாழ்வுத் திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

## தொலைக்காட்சிப் பெட்டி திருட்டு

வண்ணார்பண்ணை, கலட்டி அம்மன் வீதியில் தனிமையில் வசித்துவரும் ஆசிரியை ஒருவரின் வீட்டில் இருந்து தொலைக்காட்சிப் பெட்டி உட்படப் பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக, யாழ். பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இதேவேளை, அண்மையில் இந்தப் பகுதியில் இடம்பெற்ற மரண வீடு ஒன்றிலும் திருட முயற்சி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





த.துஷ்யந்தன்

# எதிர்காலத்தில் சந்ததியினர் கணினி அறிவை செயல்முறை ரீதியாகவும் பயன்படுத்த வேண்டும்

**தர்மலிங்கம் துஷ்யந்தன் (வயது 31) என்பவரை கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த அவரது வீட்டில் சென்று தொழில் சம்பந்தமாக உரையாடியபோது, எங்களுடன் பகிர்நது கொண்ட விடயங்களை வாசகர்களுக்குத் தருகின்றோம்.**

யாழ்.இந்துக்கல்லூரியில் உயர்தரப் பிரிவில் விஞ்ஞானம் படித்துவிட்டு - இன்றைய நாட்களில் உயர்தரம் படித்தும் வேலை கிடைப்பது கஷ்டம் என்பதால், மேலும் படிப்பதற்காகக் கொழும்புக்குச் சென்றேன். கணினி அறிவு இன்றைய காலகட்டத்தில் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டிய விடயமாக இருப்பதால், கணினி தொடர்பாகத் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தில் கணினி அடிப்படைத் தகவல் அமைப்புப் (CBIS) பற்றிக் கற்று முடித்துவிட்டு, மேலும் அதே நிறுவனத்தில் உயர்தர டிப்ளோமா முகாமைத் தகவல் அமைப்பு மற்றும் டிப்ளோமா கணினி மென்பொருள் வடிவமைத்தல் படித்துவிட்டு வேலை தேடினேன்.

அப்போது எனது கடும் முயற்சியால் **Pack soft ware point** இல வேலை கிடைத்து அங்கு கணினி மென்பொருள் வடிவமைப்பாளராக 3 வருடங்கள் கடமையாற்றினேன். வேலை செய்துகொண்டு, இங்கிலாந்து பட்டயக் கணக்காளர் (CIMA) பரீட்சை பகுதி 2 ஐ பூர்த்தி செய்தேன்.

இங்கிலாந்து பட்டயக்கணக்காளர் பரீட்சை (CIMA) எடுப்பதற்கான காரணம் கணினி மென்பொருள் வடிவமைப்பில் கூடுதலாகக் கணக்கியல் சார்பானவையாக இருக்கின்ற படியால், இந்தப் பரீட்சையினை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதாவது கொழும்பிலிருந்து CIMA படிப்பது என்றால் இரட்டிப்புச் செலவாகும். இவ்வளவு செலவு செய்தும், படித்தும், பல இளைஞர்கள் வெளிநாடு செல்வதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

நான் தொடர்ந்தும் கொழும்பில் இருக்க முடியாதநிலை. அதாவது, என்னதான் வேலைசெய்தாலும், அதற்கு மேலாகச் செலவு ஏற்படுகின்றது. சம்பளத்தில் அரைவாசி வீட்டு வாடகைக்குச் செலவாகும். மிகுதிப் பணம் - கடைச் சாப்பாட்டில் கரையும். பொருளாதாரப் பிரச்சினை காரணமாக எமது சொந்த மண்ணிற்கே வந்துவிட்டேன். தற்சமயம் லேக்கவுஸ் யாழ்.கிளை பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டேன். இரண்டு வருடங்களாக இந்தத் தொழிலினை செய்து வருகின்றேன்.

பொருளாதாரப் பிரச்சினை இப்பொழுது எனக்கு ஏற்படுவதில்லை. அதாவது கொழும்பில் இருக்கும்போது ஏற்பட்ட செலவுகள் இங்கே இல்லை. அதனால் திருப்திகரமான தொழிலாக இருக்கின்றது.

கணினித்துறைசார்பாகக் கூறும்போது, யாழ்.மண்ணிலுள்ள எதிர்கால சந்ததியினருக்குக் கணினி அறிவு கணினி வல்லுநர்களால் படிப்பதற்கு மட்டும்தான் பயன்படுத்துகிறார்கள். அதன்செயல்முறை ரீதியாகவும், பயன்படுத்துவதில்லை. மாணவர்களுக்குப் பாடசாலையில் உள்ள கணினிகள் பற்றாக்குறை, பயிற்சி நேரம் போதாமை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

கணினி மென்பொருள் வடிவமைப்பு சார்பாக கூறுவதாயின் யாழ்.மண்ணில் இதற்கான கேள்வி மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால், கொழும்பில் எந்தவொரு கடையை எடுத்துக்கொண்டாலும் இந்த வடிவமைப்பு முறை காணப்படும்.

உதாரணமாக - ஒரு கடையில் பொருளினைக் கொள்வனவு செய்யும்போது, அதற்கான பற்றுச்சீட்டு, இருப்பு மட்டம் என்பன மற்றும் கணக்கு ஏடுகள் எல்லாம் சரியாகப் பதியப்படும். இதனால் வேலைப்பளுக்களை குறைக்கலாம். மற்றும் நேரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தலாம்.

ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களோ, நிறுவனங்களோ இந்த முறைகளைப் பின்பற்றுவதில்லை. இங்குள்ள மாணவர்களே இந்த மென்பொருள் வடிவமைப்பு பகுதிநேர வியாபாரமாகக்கூட மேற்கொள்ளலாம்.

மனித சக்தியை கணினிமூலம் செலவிடுவது அதாவது தொழில் நுணுக்கத் துறைகளில் செலவிடும்போது, அவற்றால் இயன்றளவு ஆகக்கூடிய சமூக, பொருளாதார முன்னேற்றத்தைப் பெறக்கூடியதாகப் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

எமது வளங்களை வீணாக்காமலும், ஒன்றையே திரும்பத் திரும்பச் செயற்படுத்தாலும், கணினி துறையினர் ஒன்றுக்கொன்று உதவி ஒத்தாசை புரிந்து அத்துறையில் முன்னேறுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். துரித முன்னேற்றம் காணக்கூடிய இந்தத் துறையிலுள்ள ஆக்கத்தையும், ஆர்வத்தையும் மழுங்கச் செய்யும் விதத்தில் கட்டுப்பாடுகளும், வரையறைகளும் விதிக்காமல் இந்தத் துறையை ஏற்றம் பெறச்செய்யவேண்டுமென்று சொல்லி முடித்தார். ☆

நேர்காணல் - கரவை கரன்

# நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளலாம்!



கிடைககும் நேரத்தை ஒருவர் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். தொழில் நிறுவனமொன்றின் வளர்ச்சிக்கு இத்தகைய உணர்வு மிகவும் முக்கியமானதாகும்.

ஒருவரின் மனம் மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பதற்கும் இந்த விடயம் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மனித வாழ்வின் முழுமையான அர்த்தத்தையும் இதன் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அமைதியான மனம் கிடைக்கப்பெறுவதற்கும், நேரத்தை சரியாகப் பயன்படுத்தல் என்பது உதவுகின்றது.

நேரத்தை ஒருவர் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது என்பது நேரஅட்டவணை ஒன்றின் மூலமாக தனது தொழில்களைச் செய்வதாகும் நேரஅட்டவணையின் பிரகாரம் ஒருவர் தனது வாழக்கையை நடத்திக் கொள்ளுதல் என்பது முற்று முழுக்க சாத்தியப்படாத ஒன்றாக அமைகின்றது.

இந்த நிலையில் ஒருவர் தொழில் புரியும் இடத்திலாவது நேர அட்டவணையை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இத்தகைய ஒரு நேர அட்டவணையின் மூலமாக நாம் செய்யவேண்டிய வேலைகளை, தவறுகள் தாமதங்கள் இன்றி செய்து முடித்துக் கொள்ளலாம்.

ஒருவர் நேர அட்டவணையின்படி தனது வேலைகளைச் செய்துகொண்டு வருகின்ற போது, அந்த நேர அட்டவணைப்படி செய்த வேலைகளை மீளவும் ஒருமுறை நினைவுக்கு கொண்டுவந்து பார்த்தல்வேண்டும்.

நேர அட்டவணையின்படி செய்த வேலைகளை நினைவுக்குக் கொண்டுவந்து பார்க்கின்றபோது, எந்த வேலையில் நாம் அதிக நேரத்தை செலவிட்டோம் என்பதை அறிய முடியும். அவ்வாறு நாம் அதிகமான நேரத்தைச் செலவிடும் வேலையை இனங்கண்டு கொண்டு அவற்றை குறைந்த நேரத்தில் எவ்வாறு செய்யலாம் என்பதற்கும் இந்த முறை பெரிதும் உதவுகின்றது.

நேர அட்டவணையின்படி - ஒரு வேலையைச் செய்கின்றபோது இவ்வாறு பல நன்மைகள் கிடைக்கின்றன.

சரியான முறையில் நேரத்தைக் கவனத்தில் எடுத்து ஒரு வேலையைச் செய்கின்றபோது சரியான முறையில் முடிக்கக் கூடிய ஆற்றல் உருவாகும். இந்த ஆற்றல் மூலமாக நற்பெயரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்கக்கூடிய நேரத்தில் அதிக வேலைகளைச் செய்வதற்கு நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளல் மிகவும் முக்கியமான ஒன்றாக அமைகின்றது.

குறித்த தொழில் இயக்குநர் செய்ய வேண்டிய கூட்டங்கள், சந்திப்புக்கள், ஏனைய விஷேட நிகழ்வுகள் என்பவற்றைக் குறித்து வைத்துக்கொள்ளவேண்டும். அவற்றை குறித்து வைத்துக்கொள்வதன்மூலம் சுலபமாக நினைவில் வைத்துக்கொள்ளலாம்.

நேரத்தோடு வேலைகளைச் செய்வதற்கு இந்தமுறை பெரிதும் உதவும். கிடைக்கும் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு மேற்கூறப்பட்ட முறைகள் பெரிதும் உதவுகின்றன. தொழில் புரிஞர் ஒவ்வொருவரும் இத்தகைய முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். ☆

- பூ.நகுலன் -


# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 40/= | 40/= | 20/= | 25/= | 30/= | 30/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 40/= | 30/= | 30/= | 20/= | 20/= | 40/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 60/= | 70/= | 80/= | 70/= | 65/ | 65/= |
| கத்தரிக்காய் | 20/= | 25/= | 40/= | 30/= | 25/= | 20/= | 30/= | 30/= |
| பாகற்காய் | 40/= | 60/= | 50/= | 50/= | 35/= | 40/= | 50/= | 55/= |
| கரட் | 40/= | 50/= | 50/= | 30/= | 35/= | 40/= | 50/= | 40/= |
| பீற்றூட் | 15/= | 10/= | 30/= | 10/= | 10/= | 10/= | 20/= | 20/= |
| முருங்கக்காய் | 30/= | 60/= | 40/= | 15/= | 20/= | 20/= | 20/= | 20/= |
| வெங்காயம் | 40/= | 40/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= | 55/= |
| பச்சை மிளகாய் | 35/= | 35/= | 50/= | 40/= | 30/= | 40/= | 50/= | 60/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயறு உற்பத்தியில் நன்னீர் பயன்பாடு அதிக விளைச்சலைப் பெற்றுத்தருகின்றது





எமது நாட்டு மக்கள் பயிர் செய்யும் போது உபதானிய வகைகளையும் உற்பத்தி செய்யப் பழகியுள்ளனர். இந்தத் தானியங்களில் ஒன்றான பாசிப்பயறு உற்பத்தி செய்யும் முறையைப் பற்றி அறிவதற்கு இன்று நாம் உங்களுக்குச் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியுள்ளோம்.

விஞ்ஞான ரீதியாக பாசிப்பயறு, 'விக்னா கரலியேட்டா' என்ற பெயரில் அழைக்கப்படுவதோடு இந்தப் பயிர் 60 சென்ரி மீற்றர் உயரத்திற்கு வளருகின்றது. அத்துடன் இந்தப் பாசிப் பயறுச் செடியின் கிளைகள் ஒவ்வோர் திசைக்குப் பிரிந்து இருப்பதோடு 23 - 30 சென்ரி மீற்றர் ஆழத்திற்கு ஆணிவேர் நிலத்திற்குக் கீழே ஊடுருவிக் காணப்படும்.

வரட்சியான பாசிப்பயற்று விதைகளில் நீர் 9.7%, புரதம் 23.6%, கொழுப்பு 1.2%, காபோவைதரேற்று 58.2%, கனியப் பொருட்கள் 4.0 % போன்ற அனைத்துச் சத்துக்களும் பயறில் அடங்கியுள்ளன.

இந்தப் பாசிப்பயறு விதைகள் விதைத்து 6 - 8 வார காலத்திற்குப் பின்பு பூப் பூக்கும். அதற்குப் பின் காயானது 7 - 12 சென்ரி மீற்றர் நீளத்திற்கு வளருகின்றது. இதற்குள் 10, 15 பயறு விதைகள் அடங்கியுள்ளன.

பயறுகள் பல வகைப்படும். இந்தப் பயறு வகைகளுக்கு ஏற்றவாறு நிறமும், நிறையும் வித்தியாசமாகின்றது. சிறிய வட்ட வடிவமான இந்தப் பயறு விதைகள் சாதாரணமாக பச்சை நிறமாகக் காணப்படுவதோடு, சில நேரம் நிறம்மாறி மஞ்சளாகவோ அல்லது கறுப்பாகவோ மாறக்கூடிய தன்மையையும் பெற்றிருக்கிறது. இந்தப் பயறு விதைகள் முளைவிடும் இடங்களில் வெள்ளை நிறமாகக் காணப்படும்.

| நோய்கள் | கிருமிகள் | நோய்களுக்கான அறிகுறிகள் | தடுக்கும் முறைகள் |
|---|---|---|---|
| பூஞ்சணம் பிடித்தல் | நுண்ணங்கிகள் | இலைகளில் வெள்ளைநிறமாக பூஞ்சணம்பிடித்து இலைகள் மஞ்சள் நிறமாக மாறுதல் | கந்தகம் 300 கிராம் - 400 கிராம் தூளினை 124 லீற்றர் - 175 லீற்றர் நீரில் அளவோடு கலந்து அரை ஹெக்டேயருக்குத் தெளித்தல். |
| தண்டுகள் அழுகுதல் | நுண்ணங்கிகள் | கன்றுகள் சிறிதாக இருக்கும் போதே தண்டுகள் அழுகுதல் | நுண்ணங்கிகளை அழிப்பதற்கு நாசினிகளைப் போடுதல் |
| இலைகளில் புள்ளி விழுதல் | நுண்ணங்கிகள் | இலைகள் மஞ்சள், மண்ணின் நிறம் மாறுதல் | நோய் எதிர்ப்பு சக்தியுள்ள தாவரங்களை நடுதல். |
| வைரஸ் தாக்கம் | வைரஸ் | இலைகள் வெவ்வேறான நிறங்களாக மாறுவதோடு செடி அழுகுவதைக் காணலாம். | நோய் எதிர்ப்பு சக்தியுள்ள தாவரங்களை நடுதல், முளைத்திறன் கூடிய முளைகளை நடுதல் |

எந்தக் காலத்திலும், எந்தப் பிரதேசத்திலும் உற்பத்தி செய்யலாம். மழை 60 - 70 மில்லி மீற்றர் இருக்கும் பிரதேசங்களில் பயறு மிக நன்றாக வளரும். வரண்ட பிரதேசங்களில் பயறு உற்பத்தி செய்யும்போது செம்பாட்டு மண்ணில் உற்பத்திசெய்வது மிக நல்லதாகும்.

அத்துடன், யாழ்ப்பாணம், பொலநறுவை, குருநாகல், பதுளை போன்ற பிரதேசங்களில் பயறு முக்கியமான உற்பத்தியாகும். பெரும்போகத்தில் இந்த உற்பத்தி கார்த்திகை மாதத்தில் இருந்து மார்கழி வரையும் செய்வதோடு, சிறு போகத்தில் பங்குனி மாதக் கடைசியில் அல்லது சித்திரை மாதம் முதற்பகுதியில் உற்பத்தி செய்யப்படும். இந்த உற்பத்தியின் பயன்களைப் பெறும்போது காலநிலையானது வரண்ட வெப்பநிலையாக இருப்பது நல்லது.

அத்துடன் பயறு உற்பத்தி செய்வதற்கு முன் அதற்குத் தகுந்த நிலத்தைத் தயார் செய்யும்போது 15 சென்ரிமீற்றரில் இருந்து 23 சென்ரிமீற்றர் மண்ணில் ஆழத்திற்குக் கொத்திக் கிளறிவிடவேண்டும். பின்பு மண் கட்டிகளை உடைத்ததன் பின் காபனிக் உரத்தைப் போடவேண்டும். மேலும் மழைநீரை உபயோகித்து பயறு உற்பத்தி செய்யும்போது சமநிலையான நிலத்தில் உற்பத்தி செய்தல் வேண்டும். கிணற்று நீரை உபயோகித்து பயறு உற்பத்தி செய்யும்போது 10 சென்ரிமீற்றர் தொடக்கம் 15 சென்ரிமீற்றர் வரை உயரமான பாத்திகள் தயாரித்து நாற்றுக்களை நடவேண்டும்.

நிலத்தைப் பண்படுத்திய பின்பு நடுவதற்குத் தேவையான நாற்றுக்களையும், நடும் இடைவெளிகளையும் பற்றி ஆராயும்போது ஆகப் பெரிய நாற்றுக்கள் என்றால், ஹெக்ரேயர் ஒன்றுக்கு 50 கி.கி. அல்லது 52 கி.கி. நடமுடிவதோடு, சிறிய நாற்றுக்கள் நடுவதென்றால் 23 கி.கி. அல்லது 28 கி.கி. தேவைப்படும். இந்த நாற்றுக்களை நிலத்தில் வீசவும் முடியும். வரிசைகளில் நடும்போது நீளம் 30 சென்ரிமீற்றர் அகலம் 8 சென்ரிமீற்றர் இடைவெளிகள் இருக்க வேண்டும். பயறுகள் நடுவது பயறுகளின் வகைகளுக்கு ஏற்றவாறு மாறுபடும். நடும்போது ஒரு இடத்தில் நாற்றுக்களை சோடியாக நடவேண்டும்.

உற்பத்தி செய்த இடங்களில் புற்கள் வளராமல் தடுப்பதற்காக, நாற்றுக்களை நட்டு ஒரு வாரத்திற்குப் பிறகு சிறிய பயிராக வளர்ந்தபின் கூடுதலாக இருக்கும் புற்களைப் பிடுங்கி விடவேண்டும். இந்தச் செயற்பாட்டை இரண்டு, மூன்று தடவைகள் செய்யவேண்டும்.

இந்தப் பாசிப்பயறு உற்பத்தியின்போது உரங்களை இரண்டு தடவையாக இடவேண்டும். முதல் தடவை பயிரிட முதல் பயிர்ச் செய்கை செய்யும் நிலத்தில் உரத்தைப் போடுவது. இரண்டாவது தடவையாக பயிர் முளைத்த பின்னர் போடுதல் வேண்டும். பிரதான உரமாக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் (6:15:18 அளவு) கலவைகளில் ஹெக்ரேயர் ஒன்றுக்கு 100 கி.கி போடுவது மிக நல்லது.

பயறு நாற்றுக்கள் முளைத்து மூன்று வாரங்களுக்குப் பிறகு ஹெக்டேயர் ஒன்றிற்கு 65 கி.கி அமோனியம் சல்பேட் போடவேண்டும். பயறு உற்பத்தியின்போது மண் வகைகளுக்கும், காலநிலைக்கும் ஏற்றவாறு போடவேண்டிய உரங்களின் அளவுகள் வித்தியாசமாகின்றன.

வெப்பநிலைக்கு ஏற்றவாறு நீர் பாய்ச்சும் முறை வேறுபடுகின்றது. நாற்றுக்கள்நட்டு மூன்று வாரங்கள் தொடர்ந்து தினமும் ஒருமுறை நீர்பாய்ச்சுதல் வேண்டும். மழை நீரினைப் பயன்படுத்தி எடுக்கும் விளைச்சலைவிட நன்நீரைப் பயன்படுத்துவதால் விளைச்சலை கூடுதலாகப்பெறலாம்.

பயறு உற்பத்தியின்போது கிருமிகள், அதன் விளைவுகளால் ஏற்படும் நோய்கள் சம்பந்தமாக ஆராயும்போது பயறுச் செடிக்கு தொற்றும் ஒட்டுண்ணிகளாக, (Agromysa) இலையான், இலைகளை உணவாக உண்ணும் மயிர்கொட்டிகள் என்பவற்றைக் கூறலாம்.

இதனால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு கிருமி நாசினிகளைத் தெளிப்பது நல்லது.

பயறு உற்பத்தியின்போது ஏற்படும் நுண்ணங்கி நோய்களாக பூஞ்சணம் பிடிப்பது, தண்டுகள் அழுகும் நோய், இலைகளில் புள்ளி விழும் நோய்கள் போன்றவை பயறு உற்பத்தி செய்யும்போது ஏற்படுவதைக் காணலாம். இவற்றைத் தடுப்பதற்கு இரசாயனம் கலந்த கிருமி நாசினிகளை உபயோகிக்கமுடியும். வைரஸ் நோய்கள் வராமல் தடுப்பதற்கு எந்தவித இரசாயனங்களும் குறிப்பிடப் படவில்லை. இந்த நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளை, இரசாயனங்கள் சிலவற்றை உபயோகிப்பதனால் தடுக்கமுடியும்.

அத்துடன், பாசிப்பயறு உற்பத்தியின்போது நோய்களும், நோய்கள் ஏற்பட முன்னர் காணக்கிடைக்கும் அறிகுறிகளையும் வராமல் தடுப்பதற்குத் தேவையான முறைகளை ஆராயும்போது பயறு முற்றி பிறகு பயறுகளின் வெளித்தோல் மண்ணிறமாகும். உடனே, மரத்தில் இருந்து பறித்துக்கொள்ள வேண்டும். பறித்துக்கொண்ட பயறுகளை வெயிலில் காயவைத்து தடியால் அடிப்பதனாலோ அல்லது மிதிப்பதனாலோ பயறுகளைத் தனியாக எடுத்துக்கொள்ள முடியும்.

நீர் விநியோகம் உள்ள சிறுபோகத்தில் ஒரு ஹெக்டேயரில் 896 கி.கி. - 1120 கி.கி. வரை விளைச்சலைப் பெறமுடியும். பெரும் போகத்தில் மழைநீரை உபயோகித்து ஹெக்டேயர் ஒன்றில் 1120 கி.கி - 2000 கி.கி. வரையான விளைச்சலைப்பெறமுடியும். பயறு விதைகளைப் பல காலம் வைத்துக்கொள்வதற்காக அதிலுள்ள நீர் விகிதத்தைக் குறைப்பதற்கு பயறுகளை நன்கு காயவைக்கவேண்டும். ☆

நன்றி - லங்காதீப தமிழாக்கம் - ச்சி

# கல்வி கற்றோருக்கு அரச வேலை வாய்ப்புக்கள்

நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் பாடசாலை இறுதி வகுப்பினை முடித்துவிட்டுப் பாடசாலைகளிலிருந்து வெளியேறுகிறார்கள். இவ்வாறு பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு வெளியேறும் அத்தனை மாணவர்களும் உயர்ந்த கல்வி பெறுவதற்காகக் கல்லூரிகளில் சேருகிறார்கள் என்று கூறமுடியாது.

சிலர் கல்லூரிகளில் சேரக்கூடும். ஆனால், பெரும்பான்மையினரான மாணவர்கள் வேலை தேடும் முயற்சியிலேயே ஈடுபடுகின்றார்கள். பெரும்பான்மையினரான மாணவர்களின் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலை சரியாக இல்லாததே இதற்குக் காரணமாகும்.

தங்களுக்கென ஒரு வேலையைத் தேடிக்கொண்டாலொழிய, குடும்பவாழ்க்கையில் நிம்மதியைப் பெற முடியாது என்றநிலை நிலவுகின்ற காரணத் தால், வேலை தேடும் முயற்சியில் ஈடுபடுவது இன்று இளைஞர்களின் தவிர்க்கமுடியாத ஒரு நிலையாகிவிடுகிறது.

வேலை தேடும் முயற்சி என்று தொடங்கியவுடன் இளைஞரகளின் சிந்தனைக்கு வருவது அரசு தொடர்பான வேலைதான். அரசாங்க பதவி ஒரு கௌரவத்தை அளிக்கிறது என்பது ஒருபுறமிருக்க, அது வாழ்க்கைக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு நிலையையும் தோற்றுவிக்கின்றது.

அரசாங்கவேலையில் சேர்ந்துவிட்டால், அந்த வேலையின் பாதுகாப்பில் நிச்சயமான நம்பிக்கையுடன் வாழ்க்கையைக் கழித்துவிடலாம். ஊதியம் கிடைக்கும் வகையிலும் குழப்பம் ஏதும் அமையாது. நியாயமான பதவி உயர்வும், ஊதிய உயர்வும் தானாகவே கிடைக்கக்கூடும்.

இந்த மாதிரியான நம்பிக்கையுடன் இளைஞர்கள் அரசாங்க வேலைக்காக முயற்சி செய்தாலும், எல்லோருக்குமே வேலை கிடைத்துவிடக்கூடும் என்று கூறுவதற்கில்லை. படித்துவிட்டு வேலையில்லாமலிருக்கும் அத்தனை பேருக்கும் அரசாங்கத்தினால் வேலை கொடுத்துவிட முடியாது என்பது இதற்கு ஒரு காரணம். மற்றொரு காரணம் வேலைக்காக முயற்சி செய்வோர் சரியான, முறையான நடைமுறைகளைக் கையாணடு தங்கள் முயற்சிகளைச் செய்யாததே.

அரசாங்கத்தில் தாங்கள் பெற்ற கல்வியின் நிலை, தகுதி ஆகியவற்றுக்கு ஏற்ப என்ன வேலை வாய்ப்புகள் உண்டு என்பது பலருக்கு விளங்குவதில்லை.

அதனால், சிந்திக்காமல் பத்திரிகைகளில் என்ன விளம்பரம் வந்தாலும், அதற்காக விண்ணப்பம் எழுதிப்போட்டு விடுகின்றனர். பல இடங்களுக்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தால் அதிர்ஷ்டவசமாக ஏதாவது ஒன்று கிடைக்காதா என்ற குருட்டு நம்பிக்கையுடன் விண்ணப்பங்களை அனுப்புகின்றனர்.

இந்தக் காரணத்தால் பல இளைஞர்கள் அனுப்பக்கூடிய விண்ணப்பக் கடிதங்கள் ஒரு பயனும் விளைவிக்காமல் குப்பைக்கூடைக்குப் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

இந்த உண்மையினை உணர்ந்து தக்கமுறையில் தங்கள தகுதிக்கேற்ப தகுந்த வேலைக்கு விண்ணப்பம் செய்தால், ஓரளவுக்காவது வேலைவாய்ப்பினைப் பெறமுடியும் ✷.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| முகாமைத்துவ தொழிநுட்ப பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம், மொறட்டுவ. | விரிவுரையாளர் தரம் - I விரிவுரையாளர் தரம் - II | விஞ்ஞானமாணி/ முகாமைத்துவ நிர்வாக மாணி/ பொருளியல் சிறப்புப் பட்டதாரி. தொழில்நுட்ப முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவ கணக்கியற்துறையில் ஏதாவது ஒன்றில் பட்டப்படிப்பு | 17.05.2004 |
| HSBC வங்கி 24, சேர் பரோன் ஜெயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01. | முகாமைத்துவக் கணக்காளர் | கணக்கியற்துறைசார் உயர்கற்கை நெறிக்கான சான்றிதழ். (CIMA / ACCA / ICACL) | 16.05.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால அரசியல் ஆய்வு

அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு

# புதிய பரிமாணம் கண்டுள்ள சர்வதேச அரசியலும் புதிய கட்டத்தை எட்டியுள்ள இலங்கை அரசியலும்

**9.5.2004 அன்று நாவலர் கலாசார மண்டபத்தில் மு.திருநாவுக்கரசு - சமகால அரசியல் நிலை தொடர்பாக ஆற்றிய உரையிலிருந்து...**

தற்போதைய நிலையில் நாம் இன்று காணப்படுகின்ற அரசியல் நிலையை ஆழமாக விளங்கிக் கொள்ளவேண்டிய அவசியமுள்ளது. மேலெழுந்தவாரியாக பிரச்சினைகளைப் பார்க்காது, அறிவியலுக்கு ஏற்றவகையில் நாம் கருத்துக்களைப் பார்க்கவேண்டுமென்பதில் நான் நம்பிக்கை கொண்டவன்.

இன்றைய சர்வதேச அரசியலும் சரி உள்நாட்டு அரசியலும் சரி ஒரு புதிய கட்டத்திற்குள் வந்துள்ளது. நாம் பழக்கப்பட்டு போயிருக்கின்ற கடந்தகால ஆய்வுரைகளுக்கூடாகவோ, அரசியல் பழக்க தோஷங்களுக்கூடாகவோ அரசியலை அணுகுவோமேயானால், அநேகமாக பிழையானமுடிவுகளையே எடுக்க நேரும்.

என்னைப் பொறுத்தவரையில் இன்று சர்வதேச அரசியலென்பது முற்றிலும் வித்தியாசமானதாகும். அது முற்றிலும் புதியதொரு பரிமாணத்தை அடைந்துவிட்டது. அதன் கீழ் இலங்கையின் அரசியலைப் பார்க்கவேண்டும், தமிழ் மக்களின் அரசியலையும் பார்க்க வேண்டும்.

இலங்கையின் அரசியலும் ஓர் புதிய கட்டத்துக்குப் போய்விட்டது. இதுவரை காலமும் நாம் பார்த்துக்கொண்டிருந்த இலங்கையின் அரசியல் அல்ல, இனிமேல் நடக்கப்போகும் அரசியல்,

சிங்கள உயர் குழாத்தின் அரசியல் அபிலாஷைகளுக்கு வெளியே ஒரு புதிய அரசியல் கட்டம் (New face) இந்த அரசியலில் ஏற்பட்டுள்ளது. சர்வதேசரீதியாகவும் இலங்கையில் உள்நாட்டுரீதியாகவும் ஆட்சிகளின் அடிப்படையிலும் இலங்கை - இந்திய உறவின் அடிப்படையில் அனைத்திலுமே புதிய கட்டங்கள் தோன்றியுள்ளன.

எனவே ஒவ்வொரு புதிய கட்டத்தையும் தனித்தனியே அடையாளம் காண்பதுதான் எமது இன்றைய கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

இலங்கையின் அரசியல் என்பது உள்நாட்டு அரசியல். இதில் இந்தியா தலையிடக்கூடாது. இலங்கையின் கடல் எல்லையை இந்தியா தாண்டினால், இலங்கை கடற்படை இந்தியாவின் கடற்படை மீது தாக்குதல் புரியும். இது 1980 களில் இலங்கையிலிருந்து வெளியிடப்பட்ட இலங்கை அரசின் கருத்தும், இலங்கையிலிருந்து வெளிவந்த அனைத்து ஊடகங்களின் கருத்தும்.

ஆனால், தற்போது இலங்கையின் கருத்து வேறுவிதமாக உள்ளது. இலங்கை இந்தியாவிற்கு அருகிலுள்ள ஒரு நாடு. இலங்கைக்கு அருகிலுள்ள இந்தியாவிற்கு இலங்கையில் தலையிட உரிமையுண்டு. அதற்கென்று சில கடப்பாடுகளுண்டு. அதனை இந்தியா செய்ய வேண்டும் என்கின்றது.

1980 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட இலங்கையின் அரசியல் கோஷங்களுக்குப் பின்னால் இப்பொழுது காணப்படும் அரசியல் கோஷம் மிகவும் தலைகீழாக இருக்கிறது. இது விபத்துமல்ல, தற்செயலுமல்ல. இவற்றைப் புரிந்துகொள்வதிலிருந்துதான் எமது எதிர்காலத்தைப் பற்றி நாம் அடியெடுத்து வைக்கப் போகிறோம்.

> **வரலாறு ஒரு தர்க்கபூர்வமான வளர்ச்சியடைந்து தனிநாட்டைக் கோருவதுட னும், அல்லது அன்று கேட்டதைவிடக் கூடக்கொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவதுடனும் இன்று வரலாறு நிற்கின்றது. வரலாற்றை அதன் நிகழ்வுகளினால் அல்ல விளைவுகளினால் பார்க்கவேண்டுமென்கின்ற அந்தத் தர்க்கத்திற்கு நாம் வந்து நிற்கின்றோம்.**

1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தை நாடாளுமன்றில் பண்டாரநாயக்க நிறைவேற்ற எத்தணித்துக்கொண்டிருந்தபோது, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா - பண்டாரநாயக்காவைப் பார்த்து ஒரு கருத்தைச் சொன்னார்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் வளர்ச்சியடைந்த மொழியையும், தனிக்கலாசாரத்தையும் கொண்டவர்கள். அவர்களுக்கு தீங்கிழைத்தால், அவர்களுடைய மொழி உரிமையை மறுத்தால், அவர்கள் தனிநாட்டிற்காகப் போராடும் காலம்வரும். எனவே, இப்போது தமிழ்மக்கள் கேட்பதை விடவும் கூடுதலாக பின்னர் கொடுக்கவேண்டிவரும் என்று கொல்வின் ஆர்.டி.சில்வா எச்சரித்தார். இந்த வார்த்தையை நான் கூறுவது பழைய கதையொன்றை நான் மீள நினைவுபடுத்துவதற்கல்ல.

பழைய கதைகளைக் கூறுவதில் எனக்கு நம்பிக்கையுமில்லை. பழைய கதைகளை வரலாறென்று கூறுகின்ற அந்த வரலாற்றுப் போக்கை நான் கொண்டவனுமல்ல. வரலாற்றை, அதன் தர்க்கபூர்வமான இடங்களில் அடையாளம் காண்பதுதான் எமது பிரதானமான பணி. அரசியல் விஞ்ஞாபனம் என்பது சமூகப் போக்கை, அதன் தர்க்கபூர்வமான வளர்ச்சி விதிகளில் அடையாளம் காண்பதுதான்.

நேரு ஒருமுறை வரலாற்றை எடைபோடுவது செயல்களினாலல்ல, செயல்களின் விளைவுகளால் என்று கூறினார். இப்போது நாம் அதைத்தான் செய்கின்றோம்.

அதாவது பண்டாரநாயக்க 1956 ஆம் ஆண்டு கொண்டுவந்த தனிச்சிங்கள சட்டத்தினுடைய விளைவு எங்கே போய்முடிந்திருக்கிறது. அதற்காகவே இந்தப் பழைய கதையை நான் இங்கே கூறினேன்.

எனவே, பழைய விடயங்களைத் தொடும் ஒவ்வொரு கட்டங்களிலும் தர்க்கபூர்வமாக, எங்கள் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் எவ்வாறு வரலாறு வளர்ந்து சென்றிருக்கிறது. நாம் எப்படித்தான் ஆசைப்பட்டாலென்ன, எங்களை மீறி வரலாறு தன் இயல்பில் தனக்கென்று ஒரு பாதையைக் கொண்டிருக்கின்றது. அதனைப் பற்றித்தான் நாம் கதைக்கப் போகிறோம்.

எனவே, இந்தியாவைப் பற்றி இலங்கையின் கருத்து மாறியுள்ளது. கொல்வின் ஆர்.டி.சில்வா கூறியதுபோல் - வரலாறு ஒரு தர்க்க பூர்வமான வளர்ச்சியடைந்து தனிநாட்டைக் கோருவதுடனும், அல்லது அன்று கேட்டதைவிடக் கூடக்கொடுக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவதுடனும் இன்று வரலாறு நிற்கின்றது.

வரலாற்றை அதன் நிகழ்வுகளினால் அல்ல விளைவுகளினால் பார்க்கவேண்டுமென்கின்ற அந்தத் தர்க்கத்திற்கு நாம் வந்து நிற்கின்றோம். இப்போது இதனைத்தான் நாம் சர்வதேச பரிணாமங்களூடாகப் பார்ப்போம்.

புதிய உலகமயமாக்கல் சோவியத் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்டுவிட்டது. அதன் கீழ் பொஸ்னிய - கெசகோவின சமஷ்டி அரசமைப்பு பூமியில் தோன்றியுள்ளது. இந்த உலகத்தில் ஏற்பட்டிருக்கின்ற மிகவும் வித்தியாசமான ஒரு சமஷ்டி அரசியலமைப்புத்தான் பொஷ்னிய - கெசகோவின.

பொஷ்னிய - கெசகோவின அரசியல் தீர்வு - அங்கு சமஷ்டி முறையானது உலகில் இறுதியாகத் தோன்றியிருக்கக்கூடியதும், உலகின் அரசியல் மூலோபாயத்தை காட்ட வல்லதுமாக இருக்கிறது. இவற்றை எவ்வாறு பார்க்கப்போகின்றோம்.

புதிய உலகமயமாக்கல் ஒழுங்கின் கீழ் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வு சமஷ்டி அல்லது பெடரல் சுயாட்சி. பிரிட்டன் - ஸ்கொட்லாந்து விவகாரத்தில் பெரடல் சுயாட்சிக்குச் சென்றுள்ளது.

பொஷ்னிய - கெசகோவின் பிரச்சினையில் சமஷ்டித் தீர்வு எட்டப்பட்டுள்ளது. சுயாட்சி, சமஷ்டி அல்லது நாடு பிரிந்து செல்லுதல். கிழககுத்திமோர் - எரித்திரிய தனிநாடுகளாகப் பிரிந்துள்ளன.

எனவே, சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் ஏற்பட்டிருக்கின்ற உலக அரசியல் போக்கின்கீழ், தேசிய இனங்கள் பிரதேச சுயாட்சி பெறுகின்றன அல்லது சமஷ்டி அமைப்பின்கீழ் அவர்கள் ஆட்சி உரிமையைப் பெறுகின்றார்கள் அல்லது நாடு பிரிந்து செல்கிறது. இந்த மூன்றும் உலகமயமாக்கல் போக்கிற்கு விரோதமானதல்ல.

உலகமயகமாக்கல் போக்கின் ஒரு வெளிப்பாடுதான் அவை. எனவே உலக மயமாக்கலின் கீழ் இப்போது ஏற்பட்டிருக்கும் நவீன, இறுதியாக ஏற்பட்டுச் செல்கின்ற புதிய உலகமயமாக்கல் பொருளாதாரக் கொள்கையின் கீழ், உலகில் இனப்பிரச்சினைகளுக்கென்று ஒரு புதிய கட்டம் தோன்றியிருக்கிறது.

எரித்திரிய போராட்டத்தின்போது, அமெரிக்கா - சோவியத் யூனியனுக்கு எதிராக எத்தியோப்பியா பக்கம் நின்றது. அமெரிக்கா-எத்தியோப்பியா பக்கம் நின்றபோது, சோவியத் யூனியன் - எரித்திரியா பக்கம் நின்றது. அங்கு தீர்வல்ல, நீதியல்ல அவர்களுடைய சமநிலைக் கொள்கை தான் முக்கியமாக நின்றது, அவர்களுடைய அரசியல் நலன்கள்தான் முக்கியமாக நின்றது.

ஆனால், இப்போது தேசிய இனங்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுதல் என்கின்ற ஒரு விவகாரம் உலகளவில் வந்திருக்கின்றது. சுவாரஷ்யமான தொடக்கத்திலிருந்து இந்தப் பிரச்சினையை ஆரம்பிக்கலாமென நினைக்கிறேன்.

பொஷ்னிய - கெசகோவின பிரச்சினையைத் தீர்த்துவைத்தது மேற்குலகம். அதற்கான முதலாவது யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்த 1994 ஆம் ஆண்டு உடன்படிக்கை வொஷிங்டனில் நிகழ்ந்தது. அது வொஷிங்டன் உடன்படிக்கை என அழைக்கப்படுகின்றது. அந்த உடன்படிக்கையிலிருந்து தான் சமஷ்டி அலகு தொடர்பான தீர்வு உருவாக்கப்பட்டது.

இந்த சமஷ்டித்தீர்வு பற்றி சொல்லப்படுகின்ற அந்தக் கட்டியத்திற்குள் ஆறு அம்சங்களில் ஒன்று பிரதானமாக சொல்கின்றது. பொஷ்னிய - கெசகோவின கூட்டு அரசானது நிச்சயமாக திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்கவேண்டும். திறந்த பொருளாதார அமைப்பின் கீழ்தான் பொஷ்னிய - கெசகோவினாவுடைய அரசியல் தலைவிதி, மனித உரிமைகள், ஜனநாயகம் என்பன பேணப்படவேண்டும் என்று கூறுகின்றது.

(தொடரும்...)

நினைவுக் கட்டுரை

கு.புரந்தரன்

**இன்று லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தி அவர்களின் நினைவுநாள்.....**

# நாதவடிவானவரே .... நம்மண்ணின் நாயகனே ...



உலகம்போற்றும் உயர்ந்தவர்கள், உன்னதமானவர்கள் வகையிலே ஈழத்துககுப் பெருமை தேடித்தந்தவர்களில் - உலகத் தவில்மேதை அமரர் வி.தெட்சணாமூர்த்தி முதன்மையானவர் என்றால் அது மிகையாகாது.

ஈழத்தில் மட்டுமல்ல உலகளாவியரீதியிலே தவில் வித்துவத்தை பரப்பி நின்றவர். கலைகளைப் பொறுத்தவரையில், பாரதத்திற்கு ஈழம் சளைத்தது அல்ல, சமனானது அல்லது ஈழம் தான் பெரியது என்ற வரலாற்று முத்திரையை பதித்துவைத்தார் தெட்சணாமூர்த்தி.

அவரது காலத்திற்கு முன்போ அல்லது சமகாலத்திலோ அல்லது அவரது காலத்திற்குப் பின்போ - ஏன் இனிமேலாவது அப்படியொரு தவில்மேதையைக் காணமுடியாது அப்படிக் காணமுடியுமெனின் தெட்சணாமூர்த்திதான் மறு அவதாரம் எடுக்கவேண்டும்.

இணுவிலைச் சேர்ந்த அமரர்கள் விஸ்வலிங்கம் - ரத்தினம் தம்பதிகளுக்கு 26-08-1933 இல் மகனாகப் பிறந்தார். இவரது பெற்றோர் இவரை ஒரு பெரிய தவில் வித்துவானாக ஆக்கவேண்டும் என்னும் ஆர்வத்தால், சிறுவயதிலேயே அப்போது பிரபல தவில் விற்பனர்களாக விளங்கிய என்.சின்னத்தம்பி, பி.எல். இராஜகோபால், காமாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் தவிற்கலையைப் பயிற்றுவித்தனர்.

தனது எட்டாவது வயதிலேயே மேடைகளில் வாசிக்கத் தொடங்கிய தெட்சணாமூர்த்தி - பின்னர் உலகத் தவில் மேடைகளைத் தனதாக்கிக்கொண்ட மேதையானார். இந்திய பிரபல தவில் விற்பனர்களிடம் இவரைப் பயிலவைக்கவேண்டும் என்ற பெற்றோரின் விருப்பத்தால், தவில் மேதை நாச்சிமார் கோயிலடி வேலுப்பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து, தவில் பயில வைத்தனர். பின்பு தனது பெரு முயற்சியாலும் இறைவனது அருட்கொடையாலும் தனக்கென ஒருதன்மை வகுத்து தவிற் கலையில் ஒரு பெருவிற்பனரானார்.

பாரதத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாடுதுறை ரி.என்.இராஜரத்தினம்பிள்ளை, நாதஸ்வர விற்பன்னர் காரைக்குறிச்சி அருணாசலம், திருவானைக் ஷேக்சின்ன மௌலான ஸாகிப் போன்ற பெரும் மேதைகளிற்கு மிக அற்புதமாகத் தவில் வாசித்து சிறந்த பாராட்டைப் பெற்றார். அவர்களுக்கு [illegible] பால் என்றும் மங்காத புகழை அடைந்தார். இந்தியாவிலே இசைவிழா உட்பட பல நிகழ்ச்சிகளிலும் தவில்கச்சேரி என்பன ஒரு இடைவேளை நிகழ்ச்சியாகவே கணிக்கப்பெற்று வந்தது. ஆனால், அதைத் தனது தவில் வாசிக்கும் தனித்திறனாலும், கவர்ச்சியாலும் நாதஸ்வர தவில் கச்சேரியின் முக்கிய அம்சமாக இரசிகர்கள் இருந்து கேட்டு ரசிக்கும் அளவிற்கு பணியாற்றிய பெருமை தெட்சமூர்த்தியையே சாரும்.

இந்தியசபை ஒன்றிலே, பொதுவாக 5 நடைகளிலும் சாதாரணமான சங்கீத நடையை பின்பற்றி 2 மணித்தியாலங்களுக்கும் மேலாக லயவின்னியாசம் செய்துள்ளார். எந்தவிதமான தாளம், ஜாதி, கடை என்றாலும் எல்லாமே கைவரப் பெற்றவராக, எல்லாவகையிலும் திறமையாக தேர்ச்சி பெற்று விளங்கினார்.

வித்தியாசமான தாளங்களில், வித்தியாசமான இடங்களில் மிக அபாரமாக மணித்தியாலக் கணக்காக வாசிக்கும் திறமை கொண்டவர். நாதஸ்வர வித்துவான் ஷேக்சின்ன மௌலான சாஹிப்பிற்குத் தெட்சணாமூர்த்தி தவில் வாசித்த கச்சேரியினை இந்திய பிரபல சங்கீத விமர்சகர்களாகிய சுப்புடு - " இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற இதழில் எல்லை கடந்த கலை நுணுக்கத்திறன் உச்சம் என்று இவரது வித்துவத்தன்மையைப் புகழ்ந்துள்ளார். கிருஷ்ண கானசபாவில் நடைபெற்ற இந்த இசைவிழாவில், திருநாதிதேவரோ நேரில் வந்து தவில் வாசித்தாரோ என்று எண்ணும் அளவிற்கு ஒரு மனிதக் கைவிரல்களில் இவ்வளவு நுண்மையான நாதபேதங்களை இசைக்க முடியும் என்று ஒருபோதும் கற்பனை செய்து பார்த்த தில்லை என்று வர்ணித்துள்ளார்.

அந்த நாடுகளிலே இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று பலசபைகளில் தவில் வாசித்து பெரும் புகழ் பெற்றவர். அவர் தாய் நாடாகிய ஈழத்துக்குத் திரும்பியபோது, ஈழத்தவர்கள் அவரிற்கு "லயஞான குபேரபூபதி" என்ற ஒப்புயர்வான பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். ஈழத்து நாதஸ்வரக் கலைஞரான காலஞ்சென்ற கோண்டாவில் திருநாவுக்கரசுக்குத் தவில்வாசித்து காட்டியமையால், மகிழ்ச்சியடைந்து தனது மனதுக்குப் பிடித்தது நாதஸ்வரம் என்று கூறினார். மற்றும் அண்மையில் கலாசூரி அளவையூர் என்.கே. பத்மநாதனுக்கும் பலவருடங்களாக தவில் வாசித்து இரசிகர்களுக்கு விருந்து படைத்துள்ளார்.

உலகத்திலே உச்சமான நிலையில் படைக்கப்பட்டவர்கள் ஒரு யுகத்திற்கு ஒருவர் என்பதுபோல் இவரது வாழ்க்கை அமைந்து இருப்பதை நாம் பெரு இடைவெளியில் காணலாம்.

இன்றைக்கும் தெட்சணாமூர்த்தியினது கடினமான சில பிரயோகங்கள் இன்றைய உலகத் தவில் விற்பன்னர்களாலும் வாசிக்கப்பட இயலாத நிலையில் உள்ளன. உலகம் முழுவதும் கடுகளவேனும் மாசுமறையின்றி சகல கலைஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தான் தெட்சணாமூர்த்தி. அவரிடம் நேரில் கற்காதவர்கள்கூட, அவருடைய தவில் வாசிக்கும் பாணியையே போதனையாகக் கற்றுக்கொள்ள முனைகிறார்கள். சகல தவில் நாதஸ்வர மற்றும் இசைக்கலைஞர்களாலும் எந்த விதக் குறையும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டமைதான் இந்த மேதையின் சிறப்பம்சம்.

அதிசயமாக வாழ்பவர்கள் இந்த அவனியில் நீண்டகாலம் வாழ்வதில்லைப்போலும். அவரது 42 ஆவது அகவையிலே 13.05.1975 இல் இறைவன் தனது கலைக்கு இந்தப் பெருங்கலைஞனை அழைத்துக்கொண்டார். பாரதத்திலேயே அன்னாரது மறைவிற்கு கடைகள் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டன என்றால், ஈழத்தின் சோகத்தை கூறவும் வேண்டுமா.?

இவரது நினைவு மலரிலே நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் - "பட்டம் பதவியை" இழந்துவிட்டது என்று கூறியுள்ளார். அதேபோல் தெட்சணாமூர்த்தி, இவ்வுலக வாழ்வை நீத்தாலும் அவருடைய கலை அம்சம் நிலை அம்சமாகி நீடுவாழும் என்பது நிஜமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி*
*ஒல்லாது வானம் பெயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வரையறைகள் நிபந்தனைகளாகாது

நேற்று முன்தினம் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்கால சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக பல முக்கிய பிரச்சனை குறித்த கலந்துரையாடல்களுக்கு வழிவகுத்துள்ளதுடன் அது தொடர்பாக விடுதலைப்புலிகளின் தெளிவானதும் உறுதியானதுமான கருத்து நிலைப்பாட்டை அரசுக்கு தெரியப்படுத்தவும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

அரசாங்கம் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உதவும் வகையில் ஏற்பாட்டாளராகச் செயற்பட நோர்வே அரசுக்கு திடீர் அழைப்பு விடுத்ததையடுத்து, நடந்து வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சமாதானம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டின் உறுதித்தன்மையை சந்தேகிக்கவைப்பதாகவே உள்ளன.

ஜனாதிபதி ஒரு கருத்தை முன்வைத்தால் அதற்கு முரணான கருத்தொன்றை அவரது தோழமைக் கட்சிக்காரர்கள் முன்வைக்கிறார்கள். வெளியுறவுஅமைச்சர் ஒரு கருத்தை இந்தியாவில் வைத்து வெளியிடுகிறார் என்றால் அதனை நிராகரிக்கும் வகையில் வேறொரு அமைச்சர் இன்னொரு கருத்தை வெளியிடுபவராக இருக்கிறார். இந்த நிலையில் சமாதான முயற்சிகளை அரசு எந்த இலக்குடன் முன்னெடுக்க முனைகின்றது என்பது குழப்பமாகவே உள்ளது.

விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என ஏற்று பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அரசு தயார் என்று கதிர்காமர் அறிவித்திருக்கிறார் என்றால் ஜே.வி.பி யினர் அதனை முழுமையாக ஏற்கும் மனநிலை கொண்டவர்களாக இல்லை. ஏதோ நிர்ப்பந்தத்தின் பேரில் வேண்டா வெறுப்பாக அரசு எடுக்கும் நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டியுள்ளது எனச் சலித்துக் கொள்ளும் தன்மையையே அவர்களின் பேச்சுக்கள் மூலம் உணரக் கூடியதாக உள்ளது.

இது ஒரு ஆக்கபூர்வமான செயலில் இறங்கும் அரசின் கூட்டுக் கட்சிகளிடையே இருக்கக் கூடாத தன்மையாகும். இந்த முரண்நிலையானது தற்போதைக்கு மிகச் சாதாரணமானதாக தென்பட்டாலும் பேச்சுவார்த்கைளின் போது முக்கியமானதும் சிக்கலானதுமான பிரச்சினைகள் குறித்துப் பேசும் நிலை வரும்போது இது மிகவும் நெருக்கடிகளைத் தோற்றுவித்து பேச்சுக்கள் தொடரமுடியாமல் போகும் நிலைமையை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமே இல்லை.

அதுவும் இன்றைய அரசின் பிரதான கட்சியானது தனித்து நின்று முடிவெடுக்கும் திராணியற்ற ஒன்றாக இருப்பதும், தோழமைக்கட்சி பிரதான கட்சியை ஆட்டிப் படைக்கும் மனோபாவத்துடன் கூடிய ஒன்றாக வலுவாக இருப்பதும் ஆரோக்கியமான அரசியல் சூழலுக்கு ஆபத்தான ஒன்றாகவே உள்ளது.

அதுமட்டுமல்ல அரசின் ஸ்திரத்தன்மை நூலிழையில் ஊசலாடும் ஒன்றாக இருப்பதால், அதனால் சிக்கலான பிரச்சினைகளில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் சாத்தியம் அறவே இல்லாத ஒன்றாகவே இருக்கின்றது.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட தீர்மானம் எடுக்கக் கூடிய சக்தியாக இருந்தாலும் கூட நாடாளுமன்றம் அவரின் கட்டுப்பாட்டில் கீழ் இயங்கினாலும் கூட பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களில் தனித்து நின்று முடிவெடுத்து செயற்படுவார் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது.

எனவே அவர் பேச்சுவார்த்தைகளின் போது முன்னர் போன்று ஏமாற்று மூலோபாயங்களை வகுத்து செயற்படும் ஒருவராக இருக்கமாட்டார் என நம்பவும் முடியாது.

ஒரு புறம் போர் மூலோபாயத்தையும் மறுபுறம் சமாதான தந்திரோபாயத்தையும் கையாளும் இரட்டை அணுகுமுறை ஜனாதிபதிக்கு கைவந்த கலையேயாகும்.

இதனை விடுதலைப்புலிகளின் கடந்தகால அனுபவம் உணர்த்தியுள்ளதாலேயே இம்முறை தமது நிலைப்பாட்டையும் பேச்சுவார்த்தைகள் தொடர்பான அடிப்படை வரையறைகளையும் (நிபந்தனைகளல்ல) பேச்சுக்களுக்கு முன்னரே அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் முன்கூட்டியே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இது மிகமிக அவசியமான தொலைநோக்கு சிநதனையுடன கூடிய அணுகுமுறையாகும்.

"தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினையான அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுன்னர் அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வுகாண அவர்களுக்கு இயல்பு வாழ்க்கையை மீட்டுக்கொடுக்க மிகவும் அவசியமான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்தவிடயங்களில் இருந்தே பேச்சுக்களைத் தொடங்கவேண்டும்" எனவும்,

இறுதித் தீர்வு குறித்து அறுதிப் பெரும்பான்மை வலுவற்ற தொங்கு நாடாளுமன்றத்துடன் இப்போது பேசுதல் முடியாது - அதில் அர்த்தமில்லை என்றும் விடுதலைப்புலிகள் நோர்வே அரசின் முக்கியஸ்தர்கள் மூலமாக அரசுக்கும் சமாதானத்தை ஆதரித்து வலியுறுத்தும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகத் தெரிவித்திருப்பதானது பேச்சுவார்த்தைகள் உறுதியானதும் நம்பிக்கையானதுமான பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடிய தளத்தில் ஆரம்பமாக வேண்டும் என்ற நோக்கிலானதேயாகும்.

அப்படியல்லாத பேச்சுவார்த்தை ஒரு இறுதி இலக்கினை நோக்கிய உறுதியான சமாதான முன்னெடுப்பாக இருக்கப் போவதுமில்லை.

எனவே இது தொடர்பாக சூழலைச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு, அதிகார வலுவற்ற அரசைவிடவும் நிறைவேற்று அதிகாரபலம் கொண்ட ஜனாதிபதிக்கேயுண்டு...

அவர் நியாயபூர்வமாக சிந்தித்து செயல்படவேண்டும்...! செய்வாரா?

# நாடும் நடப்பும்




# அரசின் சமாதான முயற்சிகளை ஹெல உறுமய விமர்சிக்கிறது

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை ஜாதிக ஹெல உறுமய மீண்டும் கண்டித்துள்ளது. நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த ஹெல உறுமயவின் நாடாளுமன்ற பிக்கு உறுப்பினர்கள் - ஐக்கிய தேசிய கட்சியின் சமாதான முயற்சிகளை விமர்சித்த ஜனாதிபதி - இன்று அதே நோர்வே அனுசரனையுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளமை மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும் என குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் சமாதான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் - ஜே.வி.பி. நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் எரிக்சொல்ஹெய்மை வெள்ளைப்புலி என வர்ணித்தது. ஆனால், இன்று அந்தக் கட்சி அதே எரிக்சொல்ஹெய்ம் இலங்கையில் சமாதான முயற்சிகளில் ஈடுபடும்போது, மௌனித்திருக்கிறது. இது அந்தக் கட்சியின் அரசியல் சறுக்கலைக் குறிக்கிறது என ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு வரும்போதே, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது கொள்கையின்படி இந்தியா - இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டு, தீர்வுகாண உதவவேண்டும் எனக் குறிப்பிட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சியினர், ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் தலையிடுவதையும் தாம் வரவேற்பதாகவும் தெரிவித்தனர்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியை முழுமையாக தமிழ்மயப்படுத்துவதை தமது கட்சி ஏற்றுக்கொள்ளாது. அதேநேரம் கந்தப்பளை பிரச்சினையின் பின்னர் அங்கிருந்து 30 சிங்களக் குடும்பங்கள் வெளியேறியுள்ளன. இதனை ஜனாதிபதி கவனத்திற்கொள்ளாமல் தனி ஒரு அரசியல்வாதிக்குச் சார்பாக நடந்து கொள்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் ஜாதிக ஹெல உறுமயவினர் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தனர். (01)

## கல்வியியற் கல்லூரி கட்டடப்பணிக்கு 465 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கட்டுமானப் பணிகளுக்காக உலகவங்கி 465 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

உலகவங்கியின் இந்தத் திட்டத்தின்கீழ் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் விரிவுரை மண்டபங்கள், விஞ்ஞான ஆய்வுகூடம், மாணவர் விடுதி ஆகியன உட்படப் பல்வேறு கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் பெரும்பாலும் இந்த வருட இறுதிக்குள் நிறைவுறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி - விளையாட்டு மைதானத்துக்கான காணியை 26 இலட்சம் ரூபாவுக்குப் பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (லெ)

## அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விபரங்கள் திரட்டப்படவுள்ளன

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் அந்தப் பகுதி சனசமூக நிலையங்களூடாகத் திரட்டப்படவுள்ளன.

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட இடங்களில் திறமையாகச் செயற்படும் சனசமூக நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றின் நிர்வாகத்தினருக்குக் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளதாகவும், இவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ளதாகவும் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார்.

சனசமூக நிலையங்கள் ஊடாக அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டுவதன்மூலம் உரிய அபிவிருத்தித் திட்டங்களை இலகுவாக இனங்காண முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எரிபொருளின் விலையை அதிகரிக்க திறைசேரி அனுமதி வழங்கவில்லை

எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு திறைசேரி இன்னமும் அனுமதி வழங்காத காரணத்தால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதல் நான்கு மாதத்திலும் 3.8 பில்லியனை இழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளபோதிலும், இங்கு அவற்றுக்கான விலை அதிகரிப்பை மேற்கொள்ள திறைசேரி பச்சைக்கொடி காட்டவில்லையென இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாதத்திலாவது எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க அனுமதியை வழங்குமாறு நாம் திறைசேரியைக் கேட்டிருந்தோம். ஆனால், திறைசேரி அதற்கான அனுமதியை இதுவரைத் தரவில்லை. இந்தநிலை தொடருமாக இருந்தால் இன்னுமொரு 1300 மில்லியன் ரூபாவினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இழக்க வேண்டிவருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதத்திலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 900 மில்லியனை இழந்த போதும், அதற்கான நட்டக் கொடுப்பனவை இன்னமும் திறைசேரி வழங்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நிவாரண இடை நிறுத்தம் குறித்து ஜனாதிபதியுடன் எம்.பிக்கள் பேசுவர்

வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கான நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டிருப்பது தொடர்பாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பேசவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு பகுதியில் வாழும் மக்களில் 75 வீதமானோர் நிவாரணத்தை நம்பியே வாழ்க்கை நடாத்துமளவிற்கு நாட்டில் பாரிய அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரதான உழைப்பாளனை இழந்த குடும்பத்தினர் மற்றும் அங்கவீனமானவர்களைக்கொண்ட குடும்பமெனப் பல குடும்பங்கள் வடக்கு - கிழக்கில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றன.

நிவாரணத்தை மட்டும் நம்பிக் காலத்தை ஓட்டும் குடும்பங்களின் வாழ்வில் பெரும் சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் தற்போது நிவாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், இந்த விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தினை நிறைவுசெய்த பின்னர், வடக்கு - கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென வலியுறுத்தவுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## வணிகக்கல்வி

## மாதிரி வினாத்தாள்

1) செயற்திட்ட அறிக்கை அல்லது கருத்திட்ட அறிக்கை என்றால் என்ன?
நிறுவனத்தை ஆரம்பிக்க அல்லது தற்போது செயற்படக்கூடிய நிறுவனத்தை விரிவாக்கம் செயயும்போது அதன் எதிர்கால வெற்றி தோல்வியை அல்லது அதன் சக்தியை அறிந்து கொள்ளுவ தற்கு சந்தை முகாமைத்துவத்தையும் நிதிசார் தகவல்களையும் பகுப்பாய்வு செய்வ தற்காக தயாரிக்கும் அறிக்கை செயற்திட்ட அறிக்கையாகும். இது ஒரு சிறந்த வரையறுக் கப்பட்ட ஆரம்பத்தையும் முடிவையும் கொண்டதாக அமையும்.

2) செயற்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதன் நோக்கங்கள் எவை?
1. திட்டமிடுதல் மூலம் எதிர்கால வேலையை தொடர முடிதல்.
2. பல்வேறு மாற்று செயல் திட்டங்கள் மூலம் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்தல்.
3. வணிகத்தின் பொருளாதார, தொழில்நுட்ப, நிதி, சமூகத் தேவைப்பாடுகளை அறிந்துகொள்ளல்.
4. திட்டம் வெற்றியளிக்குமா இல்லையா என்பதை உறுதிப்படுத்தலாம்.
5. வங்கிகள் அல்லது ஏனைய நிதி நிறுவனங்களில் தேவையான கடன் உதவிகளை பெறுவ தற்கு இதைச் சமர்ப்பித்தல்.

3) ஒரு செயற்திட்ட அறிக்கையை தயாரிப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
1. செயற்பாட்டுக்கான திட்டமாக அமையும்.
2. செயற்திட்டத்தின் அடிப்படையில் வேலையைத் தொடரக்கூடியதாக இருத்தல்.
3. இதனை சமர்ப்பித்து நிதிநிறுவனங்களில் இருந்து கடன் வசதியை பெறலாம்.
4. திட்டம் வெற்றி தருமா இல்லையா என்பதை கண்டுகொள்ளலாம்.
5. நிறுவனம் சிறப்பாக செயற்படுவதற்கான தகவல்களைப் பெறலாம்.

4) செயற்திட்டத்தின் பிரதான அம்சங்கள் எவை?
1. செயற்திட்டத்தின் அறிமுகம் - தன்மை 2. செயற்திட்டத்தின் நோக்கம்
3. சந்தையும் விற்பனையும் பற்றிய தகவல்கள் 4. தொழில்நுட்பம் பற்றிய தகவல்கள்
5. செயற்திட்டத்தின் நிதிசார் தகவல்கள் 6. வளங்களின் தேவைப்பாடு
7. கால வரையறை 8. தீர்மானங்கள் 9. திட்டத்தின் நன்மைகள்

5) செயற்திட்டத்தின் அறிமுகம் அல்லது பின்னணியில் இடம்பெறும் அம்சங்கள் எவை?
1. இந்த உத்தேச செயற்திட்டம் புதிய நிறுவனத்திற்குரியதா அல்லது ஏற்கனவே உள்ள நிறுவனத்தின் விரிவாக்கம் சார்ந்ததா
2. உற்பத்தித் தன்மையும் அதன் பயன்பாடும். 3. நிறுவனத்தை எங்கே அமைப்பது
4. எவ்வகை நிறுவனமாக (தனிவியாபாரமா அல்லது பங்குடமையா அல்லது கம்பனியா) அமைப்பது
5. தேவையான மூலப்பொருட்கள் பற்றிய தகவல்கள்
6. உத்தேச உற்பத்தியின் சந்தைவாய்ப்புப் பற்றிய தகவல்கள்
7. முயற்சியாளனின் சுய சக்தி மதிப்பிடல் (அனுபவமும் அறிவுத் திறனும்)

6) சந்தைத் தகவல்கள் அல்லது சந்தையும் விற்பனையும் பற்றிய தகவல்களாக எவற்றைக் கூறுவீர்?
1. உத்தேச உற்பத்திக்கான தற்போதைய மொத்தக் கேள்வி.
2. உத்தேச உற்பத்திக்கான பிரதியீடுகள் பற்றிய தகவல்கள்.
3. உத்தேச உறற்பத்திக்கான தற்போதைய சந்தைவிலை.
4. சந்தையிலுள்ள போட்டியாளர்கள் பற்றிய தகவல்கள்.
5. புதிய உற்பத்தியை விற்பனை செய்வதற்கான உத்தேச விலை.
6. உத்தேச உற்பத்திகளை விநியோகிக்கக்கூடிய வழிகள்.
7. உற்பத்தியைச் சந்தைக்கு அறிமுகம்செய்து வைக்கக்கூடிய முறைகளும் அவற்றுக்கான செலவுகளும்.
8. குறித்த கால எல்லைக்குள் விற்பனை செய்வதற்கு உத்தேசித்த அளவு
9. கொள்வனவு நிறுவனங்ககளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் கழிவு வீதங்கள்

7) செயற்திட்ட அறிக்கை தொடர்பான தொழில், தொழில்நுட்பம் சார் தகவல்களாக எவ ற றைக் கருத்திற் கொள்ளவேண்டும்?
1. உற்பத்தித் தொழிற்பாட்டுத் திட்டம்
பயன்படுத்தக்கூடிய பல்வேறு தொழிற்பாடுகள், இந்தச் செயற்திட்டத்திற்கு பயன்படுத்தக் கூடிய வேறுபட்ட தொழிற்பாடுகள், அவை தொடர்பான தகவல்களைப் பெறக்கூடிய வழிகள்.
2. இயந்திர உபகரணங்கள்
தேவைப்படக்கூடிய இயந்திர உபகரணங்களின் பட்டியல், அவற்றின் உற்பத்தி இயலளவு, விலை உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகள்.
3. மூலப்பொருட்கள்
கைத்தொழிலுக்கு அவசியமான மூலப்பொருட்கள் உள்நாட்டுரீதியாகவா அல்லது வெளி நாட்டுரீதியாகவா பெறப்படுகின்றன. அவற்றைப் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் அவற்றி னது விலைகள்.
4. நிறுவன அமைவுக்கான ஏற்ற இடம்
மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதியும் மூலப்பொருட்களைச் சந்தைப்படுத்தக்கூடிய வசதியான இடமாகவிருத்தல் வேண்டும். உட்கட்டமைப்புச் சேவைகள் நிறுவனச் சுற்றாடலுக்கு ஏற்படுத்தக்கூடிய செல்வாக்குப் போன்றவையும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும்.
5. நிலமும் கட்டடமும
கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு, அந்த நிலம் கட்டடத்தை நிர் மாணிப்பதற்குப் பொருத்தமானதா? நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டடங்கள் அவற்றன் அமைப்புப்படம், கட்டடப் பரப்பளவு, கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு விலை மனுக்கள் கோரு வதா? போன்றவை.
6. உட்கட்டமைப்புச் சேவைகள்
மின்சாரம், நீர், போக்குவரத்து, தொடர்பாடல் ஆகிய சேவைகளின் தேவையும், அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத் திட்டங்கள்.
7. நிறுவனத்திற்கு அவசியமான ஆளணி
பயிற்றப்பட்ட, பகுதியளவு பயிற்றப்பட்ட பயிற்றப்படாத ஆளணிகளின் எண்ணிக்கை அவர்களை நிறுவனச் சுற்றாடலில் திரட்டிக்கொள்ள முடியுமா? அவர்களைப் பயிற்றுவிக்கத் தேவையான வேலைத் திட்டங்கள் போன்றவை.
8. சுற்றாடல்
உத்தேசத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய கழிவுப்பொருட்களின் அளவு அவை மக்களின் வாழ்க்கையையும் ஏனைய ஜீவிகளின் வாழ்க்கையையும் பாதிக்கக்கூடிய னவா? அவ்வாறாயின் அவற்றைத் தூய்மையாக்குவதற்கும் கழிவுகளை அகற்றுவதற்குமான வேலைத் திட்டங்கள் போன்றவை.
9. பெற்றுக்கொள்ளவேண்டிய அனுமதிகள்
அரசாங்கத்திடமும் ஏனைய நிறுவனங்களிடமும் பெற்றுக்கொள்ளவேண்டிய அனுமதிகள் யாவை? அவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா? பெற்றுக்கொள்ளப்படாத அனுமதிகளைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா?
10. செயற்திட்டக் கிரயம்
செயற்திட்டத்திற்கான முழுமையான கிரயங்கள் கணித்துக்கொள்ளப்படவேண்டும்.
11. நிதி வளங்களைத் திரட்டல்
செயற்திட்டத்திற்கான செலவுகளுக்குரிய நிதி வளங்களைத் திரட்டும் முறைகள் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

| | ரூபா |
|---|---|
| உத்தேச உரிமை நிதி | X |
| கடன் நிதி | X |
| மொத்த நிதி | X |

12) உத்தேச செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கான கால அட்டவணை
ஆரம்ப வேலைகள் நிறைவுபெறும் முறை, நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து செயற் பாடுகளுக்கான கால அட்டவணை தயாரிக்கப்படவேண்டும்.

13) முகாமைத்துவம்
முகாமைத்துவ அறிவைப் பெறுதலும் செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு பயன்படுதகப்பட்டுள்ள விதிகளம், பிரமாணங்களும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முகாமைத்துவ திறன்சார் ஆளணிகளின் பெயர், அவர்களது அனுபவங்கள் பற்றிய விபரம்.

### செயற்திட்ட அறிக்கையின் மாதிரியமைப்பு

1. செயற்திட்டத்தின் பெயர் : ..........
2. செயற்திட்டத்தின் அறிமுகம் :..........
3. செயற்திட்டத்தின் அமைவு :..........
 (அ) விலாசம் : ..........
 (ஆ) தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்பு :..........
 (இ) உழைப்பையும் பொருட்களையும் பெற்றுக்கொள்ளும் முறை :..........
 (ஈ) கழிவுப் பொருட்களை அகற்றும் முறை : ..........
 (உ) வாடிக்கையாளரிடமும் நடுவரிடமும் வைத்துக்கொள்ளும் தொடர்புமுறை :......
4. வியாபார முயற்சியை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் திகதி :..........
5. வியாபாரத்தின் ஆயுள்காலம் : ..........
6. உழைப்பு, மூலப்பொருள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வது தொடர்பான நுட்பமுறைகள் :...
7. சந்தைத் தகவல்கள் :..........
 (அ) சந்தைப் பிரதேசம்
 (ஆ) எதிர்பார்க்கும் அப்பொருட்களுக்கு உரித்தான சந்தைப்பகுதியும் அதில் தனது உற்பத்திற்கு உரித்தாக்கிக்கொள்ளும் சந்தைப்பகுதி: ..........
 (இ) போட்டியாளர் பற்றிய விபரம் : ..........
 (ஈ) மேம்படுத்தல் வழிகள் : ..........
 (உ) பொதியிடல், விலையிடல், விநியோகித்தல் போன்றவை :..........
8. முகாமைத்துவ தரவுகள்
 (அ) ஊழியர்களின் எண்ணிக்கை, சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் :..........
 (ஆ) செயற்திட்டத்தின் முகாமைத்துவ அமைப்பு : ..........
9. சட்டச் சூழல்
 (அ) வியாபாரத்திற்குப் பொருத்தமான சட்டதிட்டங்களும் பிரமாணங்களும் : ..........
 (ஆ) ஊழியருடன் பொருத்தமான சட்டதிட்டங்களும் பிரமாணங்களும் :..........

### செயற்திட்டக் கிரயத்தைக் கணிக்கும் முறை

செயற்திட்ட அறிக்கையில் நிதி தகவல்கள் மிகவும் முக்கியமானவை ஆகும். நிறுவனத் தின் நிலையான மூலதனம், தொழிற்பாட்டு மூலதனம் என்பவற்றின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, முழு மூலதன நிலைமையையும் சரியாக மதிப்பீடு செய்யவேண்டும். விற்பனை வருமானமும் மதிப்பீடு செய்யப்பட்டு அதிலிருந்து செலவுகள் கழிக்கப்பட்டு இலாபத்தன்மை மதிப்பிடப்படும். அத்துடன், இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டு விகிதங்கள் எவ்வாறு அமையக்கூடும் எனவும் கணிப்பிடப்பட்டு வியாபாரத்தின் உழைப்புத்தன்மை மதிப்பிடப்படும்.

செயற்திட்ட கிரயத்தை பின்வரும் அட்டவணையை மாதிரியாகக்கொண்டு கணிப்பி டலாம

| செயற்திட்டக் கிரயம் | உள்நாட்டுக் கிரயம் | வெளிநாட்டுக் கிரயம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. நிலமும் நில ஒழுங்கமைப்பும் | X | X | X |
| 2. கட்டடங்கள் | X | X | X |
| 3. இயநதிர உபகரணங்கள் (நிறுவுதற் கிரயம் உட்பட) | X | X | X |
| 4. வாகனங்கள் | X | X | X |
| 5. ஏனைய நிலையான சொத்துக்கள் (தளபாடப் பொருத்திகள்) | X | X | X |
| 6. மின்சக்தியைப் பெறுதல் | X | X | X |
| 7. பூர்வாங்க -செயற்பாட்டிற்கு முன்னுள்ள செலவுகள் | X | X | X |
| 8. எதிர்பார்ப்பு - நிச்சயமற்ற செலவுகள் | X | X | X |
| 9. தேறிய நிலையான தொழிற்பாடு மூலதனத் தேவைகள் | X | X | X |
| மொத்தம் | X | X | X |

### நிதிப் பயன்பாட்டு முறைகள்

| செயற்திட்டக் கிரயம் | உத்தேச சொத்த நிதி வளம் | வங்கிக் கடன் | மொத்தம் முதலீடு |
|---|---|---|---|
| 1. நிலமும் நில ஒழுங்கமைப்பும் | X | X | X |
| 2. கட்டடங்கள் | X | X | X |
| 3. இயநதிர உபகரணங்கள் (நிறுவுதற் கிரயம் உட்பட) | X | X | X |
| 4. வாகனங்கள் | X | X | X |
| 5. ஏனைய நிலையான சொத்துக்கள் (தளபாடப் பொருத்திகள்) | X | X | X |
| 6. மின்சக்தியைப் பெறுதல் | X | X | X |
| 7. பூர்வாங்க -செயற்பாட்டிற்கு முன்னுள்ள செலவுகள் | X | X | X |
| 8. எதிர்பார்ப்பு - நிச்சயமற்ற செலவுகள் | X | X | X |
| ? தறிய நிலையான தொழிற்பாடு மூலதனத் தேவைகள் | X | X | X |
| மொத்தம் | X | X | X |

### தொழிற்பாடு மூலதன மதிப்பீடு
(அவசியமான கால எல்லை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்)

| விபரம் | | ரூபா |
|---|---|---|
| 1. சம்பளமும் வேதனங்களும் | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 2. ஊழியர் சேமலாப நிதிப்பங்களிப்பு | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 3. இனவரி | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 4. மின்சாரம், எரிபொருள் ஏனையவை | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 5. விற்பனைப் பங்கீட்டுச் செலவுகள் | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 6. பராமரிப்பு, திருத்தச் செலவுகள் | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 7. கடனுக்கான வட்டி | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 8. காப்புறுதித் தவணைக் கட்டணம் | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 9. வாடகை, கூலி | (தேவையான கால எல்லைக்குள்) | X |
| 10. வேறு செலவுகள் | | |
| செயற்பாட்டு மூலதனத் தேவை | | X |

செயற்திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் நிதி வடிவங்கள்
(அ) பணவடிவிலான முதலீடுகள்
(ஆ) பணவடிவில்லாத முதலீடுகள்

பணவடிவிலான முதலீடுகள்

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| 1. உரிமையாளாரிடம் | X | |
| 2. வேறு முதலீட்டாளரிடம் | X | |
| 3. நீண்டகாலக் கடன் மூலதனம் | X | X |

(தொடரும்...)

B.S.பசில் (B.B.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 படையினரது சடலங்கள் கிடைக்கும்வரை

# இஸ்ரேல் படையினர் காஸாவிலிருந்து வெளியேறிச்செல்லமாட்டார்களாம்!



(டெல்அவிவ்)

காஸா நகரில் ஹமாஸ் போராளிகளினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் 6 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டிருந்தனர். கொலலப்பட்டவர்களின் சடலங் கள் ஹமாஸ் போராளிகளினால் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தின் பின் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் திரும்பவும் ஒப்படைக்கப்படும்வரை காஸா விலிருந்து வெளியேறப்போவதில்லை என இஸ்ரேலிய படையினர் தெரிவித்தனர்.

இதனால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை வைத்திருக்கும் தனிப்பட்டவர்களும், போராளிகளும் அவற்றை ஒப்படைத்துவிடுமாறு பலஸ்தீன அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

பலஸ்தீன அமைப்பின் தலைவர் யாசிர் அரபாத் தனது பாதுகாப்புச் சபையிடம் இது தொடர்பாக அறிவித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே 6 இஸ்ரேலிய படையினரின் சடலங்கள் கிடைக்கும்வரை காஸா நகரில் நிலைகொண்டிருக்குமாறு பிரதமர் ஏரியல் ஷரோன் இஸ்ரேலிய படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனால் நேற்றுக்காலை காஸா நகரில் அமைந்துள்ள வீடுகளில் இஸ்ரேலிய படையினர் தேடுதல் நடவடிக்கை களை மேற்கொண்டனர்.

இதேவேளை சடலங்களை காட்சிக்பொருளாக்கி அவமானப்படுத்தியிருந்தால் சமரசப்பேச்சுக்களுக்கு இட மில்லை என இஸ்ரேல் படை அதிகாரி ஜெனரல் மோசி யாலொன் தெரிவித்தார்.

2002 நவம்பர் மாதத்தில் மேற்குக்கரைப் பிரதேச எல்லைப் பிரதேசத்தின் தாக்குதல் ஒன்றில் 8 இஸ்ரே லிய போர்வீரர்களும், ஒரு எல்லைக் கண்காணிப்பாள ரும், 3 காவற்படையினரும் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின் நடைபெற்ற மிகப்பெரிய தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது.

## சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் வடகொரிய அணுத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்!


வடகொரியாவில் அணு ஆயுத உற்பத்தி அமைப்புக்களை அகற்றி விடுவதற்கான பேச்சுவார்த்தை களை சீனாவின் தலைநகர் பெய்ஜிங் கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் வடகொரியா, தென்கொரியா, அமெ ரிக்கா, சீனா, ரஷ்யா மற்றும் ஜப் பான் ஆகிய நாடுகள் பங்குபற்றியுள் ளன.

வடகொரிய அணு ஆயுதத் திட் டங்களைக் கைவிடவேண்டும் என அமெரிக்கா 2002 இல் தெரிவித்தி ருந்தது. ஆனால், இத்திட்டத்தின் ஒருபகுதியை நிறுத்துவதாயினும் தமக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என வடகொரியா தெரி வித்திருந்தது.

முன்னர் நடந்த இரு சுற்றுப் பேச சுக்கள் தோல்வியில் முடிவடைந் தமை குறிப்பிடத்தக்கதாகும், தற் போது நடைபெறும் பேச்சுவார்த்தை களும் சிறந்த பலனைத் தரப்போவ தில்லை என கருத்துக்கள் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் இப்பேச்சுவார்த்தை களில் சாதகமான முடிவு எதனையும் நவம்பரில் நடைபெறவுள்ள தேர்த லுக்கு முன்னர் அமெரிக்கா மேற் கொள்ளாதென அவதானிகள் கருத்து



வெளியிட்டுள்ளனர்.

இதனிடையே அமெரிக்கா பேச்சு வார்த்தைகள் மூலம் காலத்தை வீணாக்குவதற்கு முற்படுவதாக வட கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இப்பேச்சுக்கள் வடகொரியத் தலைவர் கிம் யொங் இல் அண் மையில் பெய்ஜிங்கிற்கு விஜயம் மேற்கொண்டதனால் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தின் முதற்படியென வடகொரியா தெரிவித்தது. அதே நேரத்தில் எல்லாத்தரப்பினரும் நேர் மையான தீர்வினை எதிர்பார்த்துள் ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

## அவுஸ்ரேலிய முன்னாள் ராஜதந்திரி சிறையில் தூக்கிட்டு தற்கொலை!



(ஜகார்த்தா)

அவுஸ்ரேலிய நாட்டின் முன்னாள் இராஜதந்திரி வில்லியம் பிறவுன் இந்தோனேசியாவின் பாலித்தீவி லுள்ள சிறைச்சாலையில் தூக்கில் தொங்கி உயிரிழந்தார்.

சிறையில் இவர் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டார்.

சிறுவர்கள் மீதான பாலியல் துஷ பிரயோகம் தொடர்பாக கைதுசெய் யப்பட்ட இவர்மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தோனேசிய நீதிமன்றினால் 13 வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறுவர் மீதான பாலியல் துன் புறுத்தல்கள் குறித்த விசாரணை யில் சிறுவர்களின் விருப்பத்திற் கிணங்கவே தாம் பாலியலில் ஈடு பட்டதாகத் தெரிவித்தார்.

52 வயதான பிறவுண் வில்லி யம் - சிறைத்தண்டனை விதிக்கப் பட்டபின் சிறையில் குழப்பம் அடைநது காணப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

இறுதியில் அவர் தனது படுக்கை விரிப்பை உபயோகித்து தூக்கிட்டுத் தற்கொலை புரிந்ததாக சிறைக் காவலாளி தெரிவித்தார்.

வில்லியம் பிறவுண் 1982 தொடக கம் 1984 வரை இந்தோனேசியாவிற் கான அவுஸ்ரேலியத் தூதுவராகக் கடமையாற்றியிருந்தார்.

1996 ஆம் ஆண்டு தனது பதவி யிலிருந்து ஓய்வுபெற்ற இவர் இந் தோனேசியாவின் பாலித்தீவில் வசித்துவந்தமை குறிப்பிடத்தக்கது.




## ஈராக்கில் அமெரிக்கர் படுகொலை— சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க அமெரிக்கா உறுதியெடுத்துள்ளது!



ஈராக்கில் பயணக்கைதியாகச் சிறைப்பிடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிக் பேக்கினின் கொலையாளிகளைக் கைதுசெய்வதற்கு உறுதியெடுத்துள்ளதாக புஷ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நிக் பேக்கை பணயக் கைதியாகச் சிறைப்பிடித்தவர்கள் - அவரது தலையைத் துண்டித்துக் கொலைசெய்துள்ளனர். தலைதுண்டிக்கப்படும் நிகழ்வை வீடியோ படமாகப் பிடித்து பின் அராபிய இணையத்தளம் ஒன்றில் வெளியிட்டிருந்தனர்.

ஈராக்கிய கைதிகள் அமெரிக்கப் படையினரால் துன்புறுத்தப்பட்டிருந்த மையே தலையைத் துண்டித்துக் கொலைசெய்ததற்குக் காரணமென நிக் பேக்கினை பிடித்துவைத்திருந்தவர்கள் தெரிவித்தனர்.

அல்கொய்டா அமைப்பின் முக்கிய தலைவரான அபு முசாப் அல் சர்க்குவாவி இந்தக் கொலையை மேற்கொண்டிருக்கலாம் என்ற தகவல் களை சி.ஐ.ஏ. ஆராய்ந்துவருகிறது.

நிக்பேக் கடத்திச்சென்று கொல்லப்படுவதற்கு அமெரிக்கப் படையினரின் செயற்பாடுகளே காரணம் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

நிக் பேக் - ஈராக்கில் தொலைதொடர்பு சேவையில் பணியாற்றிவந்த வேளையில் ஈராக்கியப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு கூட்டுப்படையி னரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நிக் பேக்கின் சடலம் கடந்த சனிக்கிழமை பாக்தாத்தின் வீதியோரத் தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்தக் கொலைக்கு ஈராக்கிற்கான அமெரிக்காவின் கொள்கைகளே காரணம் என அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் ஜோன் ஹெறி தெரிவித்தார்.

## புஷ்ஷின் கருத்தையடுத்து அமெரிக்க டொலர் பாவனை கியூபாவில் கட்டுப்படுத்தப்பட்டது



கியூபாவில் அமெரிக்க நாண யங்கள் மூலம் பொருட்களை விற் பனை செய்யும் வர்த்தக நிலையங் களை அந்நாட்டு அரசு மூடியுள்ளது.

அத்துடன் கியூபாவில் வாழும் அமெரிக்கர்கள் தமது தேவைக ளுக்கு எடுத்துவரப்படும் அமெரிக்க நாணயத்தின் அளவும் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கியூபாவில் டொலர் கட்டுப்பாடுகளுக்குக் காரணம் அமெரிக்க ஜனாதிபதி புஷ் - பிடல் கஸ்ரோவை பதவியிலிருந்து வெளி யேற்றுவதற்குத் தனது பூரண ஆதரவு வழங்கப்படும் எனத் தெரி வித்திருந்தமையே ஆகும்.

கியூபாவில் டொலர் கட்டுப்பாடு கள் மேற்கொண்ட பின்னர் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு முன் பெருமளவான மக்கள்கூடி பொருட் களை வாங்கியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் கருத்துக்கள் - கியூபாவில் டொலர் தொடர்பான கட்டுப்பாடுகளை இறுக் கிக் கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளதாக பிடல் கஸ்ரோ வின் அதிருப்தியாளர்கள் தெரிவித் துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு முதல் அமெ ரிக்க டொலர் சட்டரீதியாக கியூபா வில் பாவனைக்கு அனுமதிக்கப் பட்டிருந்தது. இதனால் கியூபாவில் ஆடம்பரப்பொருட்களையும் துணி வகைகளையும் கொள்வனவு செய்ய இந்த விற்பனை நிலையங்கள் உதவியாக அமைந்தது குறிப்பிடத் தக்கது.

## நைஜீரியாவில் கலவரங்களையடுத்து ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது!

நைஜீரியாவின் நகரான கனோ வில் முஸ்லிம் அல்லாதவர் மீது குழு ஒன்றினால் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் 7 பேரினது உடல்கள் கண்டெடுக் கப்பட்டன. சிலரது உடல்கள் கருகி யிருந்தன.

இந்தப் படுகொலைக்கு பழி தீர்க்குமுகமாக முஸ்லிம் இளைஞர் களினால் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன. இதனால் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவ தற்கு இரவு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவதத்தின் முன் முஸ் லிம் தலைவர்கள் சமாதான ஊர் வலங்களை நடத்தியிருந்தனர். நைஜீரிய நாட்டின் தலைவர்களும் இவ்வூர்வலத்தில் பங்குபற்றியிருந் தனர். அமைதியை ஏற்படுத்துமாறு வேண்டிக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வன்முறைகளில் வாகனங்களை நிறுத்தி முஸ்லிம்கள் பிரார்த்தனை களை உச்சரிக்குமாறு கேட்டதாக பல்கலைக்கழக மாணவரான அமினா ஊஷ்மன் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற பிரதேசத் தில் சட்டம் ஒழுங்கை ஒவ்வொரு வரும் தம்கையில் எடுத்துக்கொண்ட தாக பொலிஸ் அதிகாரியான அப் துல் டமினி தெரிவித்தார்.

நைஜீரிய ஜனாதிபதி ஒப சன்யோ இச்சம்பவத்தை கண்டித்தி ருந்தார். இவ்வாறான சம்பவங்களை முற்றாக நிறுத்துவதற்கான காலம் வந்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

1999 ஆம் ஆண்டு இராணுவ ஆட்சி முடிவடைந்த பின்னர் ஏற் பட்ட இன, மத அரசியல் வன்முறை களினால் இதுவரை 10000 இற்கும் மேற்பட்ட நைஜீரிய மக்கள் உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில் வெடிவிபத்து 7 பொதுமக்கள் உயிரிழப்பு!

பிரித்தானியாவில் கிளாஷ்கோ நகரில் - பிளாஸ்ரித் தொழிற்சாலை யில் நடைபெற்ற வெடிவிபத்தில் 7 பேர்வரை கொல்லப்பட்டனர்.

ஆனால், தட்டிக்கொள்ளும் ஒலி கள் கேட்கக்கூடியதாக உள்ளதால் இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கியிருக்கலாமென தீயணைக்கும் படையினர் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளின் மீட்புப்பணியாளருக்கு ஏற்பட்டிருந்த அனுபவங்களின்மூலம் சம்பவம் நடைபெற்ற சில நாட் களின் பின்னரும் மக்களைக் காப் பாற்ற முடியுமென மீட்புப் பணியா ளாகள் நம்..க்கை தெரிவித்துள்



ளனர்.

தீயணைக்கும் படைக்கு உதவி யாக மோப்பநாய்களும் பயன்படுத் தப்படவுள்ளது. இதேவேளை இடிபாடு களுக்குள்ளிருந்து இதுவரை 7 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு புலிகளுடன் பேசுவதே யதார்த்தம்!

## கிளிநொச்சி வைத்தியசாலையின் கட்டடத் தொகுதி நேற்றுத் திறப்பு!



ஜப்பானின் நிதியுதவியுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட மகப்பேற்று விடுதி மற்றும் சாதாரண விடுதிகள் உள்ளடக்கிய கட்டடத்தொகுதி நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தொகுதி திறப்பு விழாவில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சுகாதார அமைச்சு அத்தியட்சகர்கள், மகாணசபை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அணியாக இருக்கும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்பது யதார்த்தபூர்வமானது.

இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நேற்று மகரகமவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும்போது ஒருதரப்பினருடன் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதாயின் இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடையவர்களிடம் மட்டுமே பேசவேண்டும். அதனாலேயே இந்த தேசிய பிரச்சினையுடன் தொடர்புடையவர்களுடன் பேசவேண்டும் எனக் கூறுகின்றோம்.

தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடைய பிரதான அணியான விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழ்மக்களின் பிரதான பிரதிநிதிகளாக இருக்கின்ற விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் உணர்ந்துள்ளது.

இதனால்தான் அவர்கள் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நாங்கள் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதான பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் முன்வைத்துப் பேச்சுக்களை நடத்த வேண்டும் எனக் கருதுகின்றோம்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியவேளை வாய்மூடி மௌனம் சாதித்தவர்கள் நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்கள் என நாங்கள் கூறியிருந்தோம். தீர்வு காண்பதற்காக நடத்தப்படும் சமாதானப் பேச்சுக்களில் நோர்வே மத்தியஸ்தர்களாக அன்றி ஏற்பாட்டாளர்களாகவே செயற்படவேண்டும்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்பு, பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளர்கள் என்ற இரண்டிற்கும் நோர்வே என்ற தனித்தரப்பு இருப்பது தவறு. இதனை மாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் நிலைப்பாட்டுக்கு சந்திரசேகரன் வரவேற்பு!

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பின்னரே, இனபபிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு குறித்த பேச்சுக்கள் நடத்தப்படும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தாம் வரவேற்பதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாவது -

தற்போதைய அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்களை, வெளிநாடுகளிலிருந்து நிதியுதவிகளை பெற்றுக்கொள்வதனை நோக்காகக் கொண்டே செயற்பட்டு வருகின்றது.

இதற்கு உதாரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என முன்னர் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், அமெரிக்காவில் அதற்கு மாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம் ஜே.வி.பியும் தொடர்ந்தும் சமாதானத்துக்கு எதிரான கருத்துக்களையே தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் - அரசாங்கத்தின் கொள்கைகளுக்காக விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளக்கூடாது எனவும் அவர் கேட்டுள்ளார்.

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் நோர்வே தூதுக்குழு சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுக் குழுவினர் முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்து, சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து பேச்சுகள் நடத்தினர்.

இந்தச் சந்திப்பு முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் நோர்வே சமாதான தூதுக்குழுவின் தரப்பில் - நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும், முஸ்லிம் காங்கிரஸின் தரப்பில் - அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த ரவூப் ஹக்கீம் -

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறும் பேச்சில் முஸ்லிம் பிரதிநிதிகளை தனித்தரப்பாக கலந்துகொள்வதற்கான உத்தரவாதங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது.

பேச்சுக்கள் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து மீள ஆரம்பிக்கின்றபோது கட்டாயம் அதனை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. எமது இந்தக் கோரிக்கை குறித்து எதுவித சாதகமான பதிலும் கிடைகக வில்லை.

விடுதலைப் புலிகளும், அரசும் சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் குறித்து ஆராய்கின்றபோது இந்த விடயம் குறித்து பேசப்படும். இதன்பின்னர் இதுபற்றி முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் தெரிவிக்கப்படுமென சூசகமாகத் தெரிவிக்கப்பட்டதாகக் ஹக்கீம் கூறினார்.

### இரண்டு....

கள் இருவரும் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி படுகொலை தொடர்பாக மரணவிசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும், சடலங்கள் பொலநறுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், அப்பகுதிக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

### தென்னந்.....

நேற்று மாலை பளைப்பகுதியிலுள்ள தமிழீழ வருவாய்த்துறை பணிமனையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் செ.தமிழேந்தி இந்த முடிவை அறிவித்தார்.

அவருடன் தமிழீழபெருந்தோட்டப் பிரிவுப் பொறுப்பாளர் ச.நக்கீரன் மற்றும் வருவாய்த்துறைப் பொறுப்பாளர் சி.மருதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் உள்ள 263 துண்டுகளைக் கொண்ட 4460 ஏக்கர் தென்னந்தோட்டங்களே மீளக்கையளிக்கப்படவுள்ளது.

எனினும் மீளக்கையளிக்கப்படும் தென்னந்தோட்டங்களில் உரிய மீள் நடுகை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, காணி உரிமையாளர்களிடமோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தாளர்களிடமோ இக்காணிகள் கையளிக்கப்படவுள்ளதாகவும் இம் மீள்கையளிப்பினால் தமக்கு வருடாந்தம் 8 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி தெரிவித்தார்.

### ஜனாதிபதி-பிரபா...

அடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் கருத்துத் தெரிவித்தார்.

இவ்வாறான சந்திப்பொன்றில் அவசியம் இருப்பதாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கருதவில்லை எனத் தெரிவித்த அவர், சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து எமது நிலைப்பாட்டை ஏற்கனவே அரசுக்கு அறிவித்துவிட்டோம். அந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என கருத்துரைத்தார்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு சாதகமான பதில் கிடைக்காமல் உலகம் சுற்றி எவரையும் சந்திப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆர்வம் கொள்ளவில்லை எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் விளக்கியுள்ளார்.

### ஜனாதிபதி ...

இனப்பிரச்சினையின் இறுதித்தீர்வுக்கும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்ததை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை.

நாட்டில் சிறுபான்மை அரசாங்கம் ஒன்று ஆளும் நிலையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்ட பின்னர் இறுதித் தீர்வுக்கான பேச்சுக் குறித்து ஆராய்வோம் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் தகவலை நேற்று முன்தினம் நோர்வேக் குழுவினர் ஜனாதிபதியிடம் அறிவித்தனர். இதனடிப்படையிலேயே ஜனாதிபதி வழங்கியுள்ள செய்தியுடன் விதார் ஹெல்கிசன் கிளிநொச்சி சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### புலிகளுடன்....

டம் ஒப்படைக்கப்பட்டனர்.

18 வயதிற்கு மேற்பட்ட இந்த 9 இளைஞர்களும் தாம் வீடு செல்லப்போவதாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வேண்டிக்கொண்டதை யடுத்தே பெற்றோரிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

(91,202)

## மாணவருக்கான சீருடைத் துணி மீண்டும் பாடசாலைகள் மூலம்!

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை மீண்டும் பாடசாலைகளூடாக வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஆரம்ப காலங்களில் பாடசாலைகளின் ஊடாகவே பாடசாலை சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வந்தன.

பின்னர் சில சிரமங்கள் காரணமாக கிராமசேவையாளர் ஊடாக பிரதேச செயலகங்களில் வழங்கப்பட்டுவந்தன.

அவ்வாறு விநியோகிப்பதில் சில சிக்கல்கள் காரணமாகவே மீண்டும் பாடசாலைகளூடாக சீருடைத் துணிகளை வழங்க நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி இந்த ஆண்டுக்கான சீருடைத்துணிகள் பாடசாலைகளிலேயே விநியோகிக்கப்படவுள்ளன.

### அமெரிக்க....

அத்துடன், இந்த விஜயத்தின் போது, திருகோணமலைத் துறைமுகத்துக்கும் கிறிஸ்ரினா றொக்கா செல்லவுள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜதந்திரியாக கிறிஸ்ரினா றொக்கா பதவி வகித்து வருவது குறிப்பிடத் தக்கது.

இவர் கடந்த 2001 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் இலங்கைக்கு மேற்கொள்ளும் மூன்றாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத் தக்கது.

### விலைக்.....

இதன் மூலம் மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவுள்ளது.

சகல வியாபார நிலையங்களிலும் விலைப்பட்டியல் விபரம் தொங்க விடப்படவேண்டும். சில பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதே விலையிலேயே பொருட்கள் விற்பனை செய்யப்படல் வேண்டும். பொருட்களுக்கென விலை விபரங்கள் இன்னும் ஒருசில தினங்களில் வெளியிடப்படவுள்ளன.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இந்த விலைப்பட்டியல் விபரங்கள் வடக்கின் சகல பகுதிகளிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது எனவும் தமிழேந்தி மேலும் தெரிவித்தார்.

(202)

இணைப்புக்களூடனான மேசைத்தொலைபேசி விசேட கழிவில் விற்பனைக்கு !

24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களூடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.



உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கட்டணமே - 25/=

மொபிடல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்

Hand Phone Unlock செய்து தரப்படும்

Hand Phone பழுது பார்க்கப்படும்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்.

மேலதிக விபரங்களுக்கு:

பவர்செல்லுலர்ட்ரேடிங் கம்பனி

இல.185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வின்சர் தியேட்டர் முன்பாக நியூ லலிதா கட்டடம் (கடை முதலாம் மாடியில் உள்ளது)

T.P: 021 222 7070 - 0712399220 0777281521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.